மலர்-1 இதழ்-6 நவம்பர் 16-30 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக வெளிவரும் இமெயில் புத்தகம்





# வானை பிளக்கும் சரண கோஷம்

# ஐயப்பனின் சிறப்புகள்

சபரிமலை ஐயப்பனை வருடந்தோறும் சென்று வரும் பல அன்பர்களுக்கு சபரிமலையைப் பற்றிய முழுவதுமான தகவல்கள் தெரியாமலேயே அவைகள் மறைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சில தகவல்களை தெரிந்து கொள்ள பல்வேறு அன்பர்கள் கூறிய தகவலை தொகுத்து நமது ஆன்மிக மாதமிருமுறை மெயில் புத்தகம் வாசகர்களுக்கு வழங்குகிறது.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் வளராத சமயத்தில் காசிக்கு செல்பவர்கள் குடும்ப வாழ்க்கையை முடித்து, கடமைகள் அனைத்தையும் துறந்த பின்தான் செல்வார்கள். அதற்கு காரணம் காசிக்கு செல்பவர்கள் திரும்ப வருவார்கள் என்று யாராலும் நிச்சயம் சொல்ல முடியாது. ஏனென்றால் வாகன வசதியோ, தொழில் நுட்பமோ அக்காலத்தில் இல்லை.

காசி பயணத்தைப் போன்றுதான் சபரிமலை பயணமும் அமைந்தது. அக்காலத்தில் சபரிமலை செல்பவர்கள் “போய் வருகிறேன்” என்று கூறமாட்டார்கள். காரணம் சபரிமலைக்கு சென்றால் திரும்பி வர எத்தனை நாட்கள் ஆகும் என்று அவர்களுக்கே தெரியாது. வந்தாலும் வரலாம் வராமலும் போகலாம் என்ற ஒரு நிலை இருந்தது.

ஐயப்பனின் சன்னதி இங்குதான் உள்ளது என்று யாராலும் சரியாக கணிக்க முடியாதவாறு காட்டைச் சுற்றி பல்வேறு மரங்களும், கோரைப் புற்களுமாக சூழ்ந்திருந்ததாலும், சிங்கம், புலி, பாம்பு, யானை போன்ற விலங்குகளின் சாம்ராஜ்யம் நடந்து கொண்டிருந்ததாலும் சபரிமலை பயணம் மிக... மிக... சிரமம் வாய்ந்த பயணமாகவே இருந்தது.

இதுபோன்ற சிரமமான பயணத்தை துவங்குவதற்கு முன்பே, காட்டிற்குள் சென்று தங்கி, ஐயப்பனை எவ்வாறு காணவேண்டும் என்ற பயிற்சியாக அமைந்ததுதான் “சபரி மலைக்கு மாலை அணியும் பழக்கம்”.

வெறும் கட்டாந்தரையில் படுப்பது, காலணி அணியாமல் நடப்பது, போதை வஸ்துக்களை விடுவது, இரண்டு வேளை பச்சைத் தண்ணீரில் குளிப்பது, இறை சிந்தனையுடன் இருப்பது, குடும்ப உறவிகளிடமிருந்து சற்று விலகி இருப்பது, சுவை மிகுந்த உணவை தவிர்ப்பது, புலால் உணவை தவிர்ப்பது... போன்ற அனைத்து விரத கட்டுப்பாடும், கொடிய காட்டில் மனிதன் இறை சிந்தனையுடன் ஐயப்பனை தரிசிக்க கடைபிடிக்கப்பட்ட பழக்கவழக்கமே விரத முறையாகவும் கடைபிடிக்கப்பட்டது.

மிக... மிக... கடினமான விரத முறையாக இருந்த காரணத்தாலும், உயிருக்கு உத்திரவாதம் இல்லாத பயணமாக சபரிமலை பயணம் இருந்த காரணத்தாலும் சபரிமலைக்கு மாலை அணிவோர் மிகக் குறைந்த சதவீதமாகவே இருந்தது.

இதுபோன்ற சிரம் மிகுந்த காலத்தில் ஐயப்பனை தரிசித்த அனைவரும் ஐயப்பனுக்கு நிகராகவே கருதப்பட்டதால்தான், அக்காலத்தில் துளசி மற்றும் சந்தன மாலை அணிந்த ஐயப்ப பக்தர்களை “சாமி சரணம்” என்று ஐயப்பனுக்கு நிகராகவே அழைத்தனர்.

மேற்கண்ட நடைமுறைகள் அனைத்தும் சுமார் 25 முதல் 30 ஆண்டுகளுக்கு முன்புவரை கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகளாகும். (கால மாற்றம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, மலையை சுற்றி சிமெண்ட் சாலை, நினைத்த பொருள் நினைத்த இடத்தில் வாங்கும் வசதி போன்ற பல்வேறு காரணங்களால் சபரிமலை தற்போது தனது தனித்துவத்தை இழந்து, மிகப் பெரிய சுற்றுலா தலமாகவும், அரசுக்கு வருமானம் ஈட்டித் தரும் மிகப்பெரிய அருங்காட்சியகமாகவே மாறிவிட்டது.) தற்போது பல்வேறு பல மலைகளைச் சுற்றி நடு நாயக மாக அமர்ந்திருக்கும் ஐயப்பனுக்குரிய பல் வேறு சிறப்புகளை எளிமையாக தொகுத்து கொடுத்துள்ளோம்.

## தங்கச் சிலை உருவான விதம்:

பந்தள மகாராஜாவால் செய்யப்பட்ட ஐயப்பன் சிலை ஐம்பொன்களால் செய்யப்பட்ட சிலையாகும். ஒரு சில சமூக விரோத கும்பலால் 19ஆம் நூற்றாண்டில், ஐயப்பன் குடியிருக்கும் இடம் எரிக்கப்பட்டுவிட்டதால், பந்தள மகாராஜாவால் செய்யப்பட்ட சிலை உருகியது, உருகிய பஞ்சலோகத்தை திருவிதாங்கூர் தேவசம் போர்டு மீட்டு, மிகப்பெரிய மணியாக உருமாற்றினர். அந்த மணி தற்போது சபரிமலை 18ம் படிக்கு வலப்புறம் நிறுவியுள்ளனர். பஞ்சலோக சிலை உருக்கப்பட்டதால் புதியதாக ஐயப்பன் சிலையை தங்கத்தால் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## பதினெட்டு படிகளின் தத்துவம்:

ஐயப்பன் தன்னுடைய 18 கருவிகளைக் கொண்டு 18 படிகளை உருவாக்கியதாக கூறப் படுகிறது அந்த 18 கருவிகள்

1. வில், 2. வாள், 3. வேல், 4. கதை, 5. அங்குசம், 6. பரசு, 7. பிந்திபாவம், 8. பரிசை, 9. குந்தம், 10. ஈட்டி, 11. கை வாள், 12. முன்தடி, 13. கடுத்தி வை, 14. பாசம், 15. சக்கரம், 16. ஹலம், 17. மழு, 18. முஸலம் ஆகிய 18 போர்க் கருவிகள் ஆகும்.

பதினெட்டுப் படிகளையும், ஐந்து இந்திரியங்கள், ஐந்து புலன்கள், ஐந்து கோசங்கள், மூன்று குணங்கள் என்று கூறுகிறார்கள் அவை முறையே

இந்திரியங்கள் ஐந்து (பஞ்சேந்திரியம்): கண், காது, மூக்கு, நாக்கு, கை கால்கள்.

புலன்கள் ஐந்து (ஐம்புலன்கள்): பார்த்தல், கேட்டல், சுவாசித்தல், ருசித்தல், ஸ்பரிசித்தல்.

கோசங்கள் ஐந்து (பஞ்ச கோசங்கள்): அன்னமய கோசம், ஆனந்தமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், ஞானமய கோசம்

குணங்கள் மூன்று (த்ரி குணங்கள்): ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம்

இந்த பதினெட்டையும் கட்டுப் படுத்தியோ ஜெயித்தோ வாழ பதினெட்டுப் படிகளை ஏற வேண்டும்.

## 18 வகை தத்துவங்கள்

மெய், வாய், கண், காது, மூக்கு, சினம்,



## இருமுடியுடன் மட்டும்தான் 18ம் படி ஏற வேண்டும்

சபரி மலையில் உள்ள பதினெட்டு படிகள் ஆன்மீக சக்தி நிறைந்த பகுதி. முழுமையான ப்ராணன் கொண்ட பகுதி. அதனால் தான் அதற்கு பூஜைகள் நடத்தப்படுகிறது. வேறு எந்த கோவிலிலும் படிக்கட்டுகள் கட்டிடங்களுக்கு வருடா வருடம் பூஜை செய்யமாட்டார்கள்.

இருமுடி கட்டி தலையில் அழுத்தம் கொடுத்த வண்ணம் தலையில் ப்ராணன் செயல்படும் நிலையில் அந்த படிக்கட்டுகளை அணுகினால் முழுமையான சக்திமாற்றம் ஏற்படும். இதையே நியதியாக்கினார் சபரிமலை பகவான்...

இருமுடி கட்டாமல் கூட ஐயப்பனை தரிசனம் செய்யலாம். ஆனால் இருமுடிகட்டாமல் பதினெட்டாம் படியை தொட அனுமதிக்காததற்கு இதுதான் காரனம். சபரிமலையில் பின்பற்றும் அனேக விஷயங்களில் நுட்மமான பின்புலம் உண்டு.

காமம், பொய், களவு, சூது, சுயநலம், பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, ஸத்ய, தாமஸ, ராஜஸ, என்ற 18 வகை குணங்களை தாண்டினால் பகவான் ஐயப்பனைக் காணலாம்.

### 18 படிகளில் வாஸம் செய்யும் தேவதைகள்

ஒன்றாம் திருப்படி: சூரிய பகவான்
இரண்டாம் திருப்படி: சிவன்
மூன்றாம் திருப்படி: சந்திர பகவான்
நான்காம் திருப்படி: பராசக்தி
ஐந்தாம் திருப்படி: அங்காரக பகவான்
ஆறாம் திருப்படி: முருகன்
ஏழாம் திருப்படி: புத பகவான்
எட்டாம் திருப்படி: விஷ்ணு
ஒன்பதாம் திருப்படி: வியாழ ( குரு ) பகவான்
பத்தாம் திருப்படி: பிரம்மா
பதினொராம் திருப்படி: சுக்கிர பகவான்
பனிரெண்டாம் திருப்படி: இலட்சுமி
பதிமூன்றாம் திருப்படி: சனி பகவான்
பதிநான்காம் திருப்படி: எம தர்ம ராஜன்
பதினைந்தாம் திருப்படி: இராகு பகவான்
பதினாறாம் திருப்படி: சரஸ்வதி
பதினேழாம் திருப்படி: கேது பகவான்
பதினெட்டாம் திருப்படி: விநாயகப் பெருமான்

இதில் கவனிக்கப்பட வேண்டியவை ஒற்றைப்படை வரிசையில் நவக்ரஹ தேவதாக்களும் இரட்டைப்படை வரிசையில் தெய்வக் குடும்பமும் வாஸம் செய்வதாக ஐதீகம், எனவேதான் படிபூஜை சபரிமலையில் சிறந்த முறையில் செய்யப்படுகிறது படிபூஜை நடைபெறும் தினத்தன்று 18 படிகளை பூக்களாலும்; விளக்குகளாலும் அலங்கரித்து அவற்றிற்கு கீழே 18 படி ஏறுமிடத்தில் பிரதான தந்திரி 18 வெள்ளி கலசங்களை வைத்து படிபூஜை செய்வார்.





## பெண்களை ஏன் அனுமதிப்பதில்லை

குழந்தை பருவ பெண்களும், வயது முதிர்ந்த பெண்களும் சபரி மலை செல்ல தடையேதும் இல்லை. இளம் பெண்களுக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டதன் காரணம் என்னவென்றால்?

யோக சக்தி என்பது மனிதனின் உடலில் கீழ் இருந்து மேல்நோக்கி செயல்பட வேண்டும். மேலிருந்து கீழ் நோக்கி செயல்படக் கூடாது. பிறப்புறுப்பு பகுதியில் செயல்கள் இருக்கும் பொழுது ப்ராண சக்தியானது உடலில் கீழ் நோக்கி பயணிக்கும். இந்நிலையில் ஆன்மீக எழுச்சி ஏற்படாமல் மன சிதறல்கள் ஏற்பட்டு, இது போன்ற பாதிப்புகள் பிறருக்கும் பரவும். இதை தவிர்த்து தலைப்பகுதியில் செயல்கள் இருந்தால் ப்ராணன் மேல் நோக்கி பயணித்து ஆன்மீக உயர்வுக்கு வழிகாட்டும். கருமுட்டையை தயார்படுத்துதல், கருப்பையில் அதை நிலைப்படுத்துதல் மற்றும் கருமுட்டையை உடைத்து வெளியேற்றுதல் என பெண்களின் கருப்பை மாதம் முழுவதும் செயல்படும் ஓர் உறுப்பு.

அப்படி கருப்பை செயல்படும் சமயம் அதீதமான இறைசக்தி உள்ள இடத்திற்கு சென்றால் (அபாணன்) கீழ் நோக்கி செயல்படும் ப்ராணன் திடீரென மேல்நோக்கி செயல் படத்துவங்கும். இதனால் கருப்பை தன் செயல்பாட்டை இழந்து கருமுட்டையை வெளிப்படுத்தும் தன்மையை விட்டு மலட்டுத் தன்மைக்கு செல்லும். கோவிலுக்கு சென்றால் வளர்ச்சி என்பது தான் நடக்க வேண்டுமே தவிர அழிவு நடக்கலாமா? கருப்பை செயல்படும் பெண்கள் அனேகர் இத்தகைய இடத்திற்கு சென்றால் நம் எதிர்கால சந்ததிகள் உருவாவதில் மிகப்பெரிய பிரச்சனை ஏற்படும்.

இதனாலேயே நம் கோவில்களில் கூட சில இடங்களில் இளம் பெண்கள் அனுமதிப்பதில்லை.

### 18 திருநாமங்களுடன் ஐயப்பன் அமர்ந்திருக்கும் படிகள்

ஒன்றாம் திருப்படி: குளத்துப்புழை பாலகன்
இரண்டாம் திருப்படி: ஆரியங்காவு ஐயன்
மூன்றாம் திருப்படி: எரிமேலி சாஸ்தா
நான்காம் திருப்படி: அச்சன்கோயில் அரசன்
ஐந்தாம் திருப்படி: புவனேஸ்வரன்
ஆறாம் திருப்படி: வீரமணி கண்டன்
ஏழாம் திருப்படி: பொன்னம்பல வாஸன்
எட்டாம் திருப்படி: மோஹினி பாலன்
ஒன்பதாம் திருப்படி: சிவ புத்ரன்
பத்தாம் திருப்படி: ஆனந்த சித்தன்
பதினொன்றாம் திருப்படி: இருமுடிப் பிரியன்
பனிரெண்டாம் திருப்படி: பந்தள ராஜகுமாரன்
பதிமூன்றாம் திருப்படி: பம்பா வாஸன்
பதினான்காம் திருப்படி: வன்புலி வாஹனன்
பதினைந்தாம் திருப்படி: ஹரிஹர சுதன்
பதினாறாம் திருப்படி: ஸத்குரு நாதன்
பதினேழாம் திருப்படி: பிரம்மாண்ட நாயகன்
பதினெட்டாம் திருப்படி: ஸத்ய ஸ்வரூபன்

### படிபூஜை

18 மலை தேவதைகளை வழிபாடு செய்வதற்காகத்தான் படிபூஜை நடத்துகிறார்கள் அவை என்னவென்றால்

சபரி மலை, பொன்னம்பல மேடு, கவுண்ட மலை, நாக மலை, சுந்தர மலை, சிற்றம்பல மேடு, கல்கி மலை, மாதங்க மலை, மைலாடும் மலை,ஸ்ரீ மாத மலை, தேவர் மலை, நீலக்கல் மலை, தலப்பாறை மலை, நீலி மலை, கரி மலை, புதுச்சேரி, அப்பாச்சி மேடு, இஞ்சிப் பாறை

### 18 படிகளின் சிறப்பு

7. 18 படிகளும் ஒரே கல்லினால் ஆனது எல்லாப் படிகளும் 9 அங்குல உயரமும் 5 அடி நீளமும் உடையதாகும் தேங்காய் உடைத்துப் படிகள் தேய்வதைத் தடுக்கும் பொருட்டு திருவாங்கூர் தேவஸ்தானம் பஞ்ச லோகத்தினால் ( தங்கம் ; வெள்ளி ; பித்தளை ; செம்பு ; ஈயம் ) தகடு செய்து படிகளின் மேல் அமைத்துள்ளனர்.

18 படிகளில் இருமுடிக் கட்டு இல்லாமல் படியேறி வர சிலருக்கு மட்டுமே உரிமையுண்டு அவர்கள் பந்தள ராஜ குடும்பத்தினர், தந்திரிகள், மகர சங்கராந்தியன்று திருவாபரணப் பெட்டியை சுமந்து வரும் ராஜ பிரதிநிதி திருவாபரணப் பெட்டியையும் தங்க அங்கியையும் வரவேற்கும் தேவஸ்தான உறுப்பினர்கள் (வரவேற்கும் சமயத்தில் இவர்கள் ஐயப்பன் அனுமதி பெற்று மாலையணிந்திருக்க வேண்டும்)

தொகுப்பு: ஷ்யாம் சுந்தர்



## ஸ்ரீலட்சுமிக்கு பிரியமான வில்வம்

வில்வ மரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள் என்று சொல்லப்படுகிறது.

லட்சுமிக்கு மிகவும் பிடித்தமான இலை வில்வம் என்பது பலருக்குத் தெரியாது. திருவஹிந்திரபுரத்தில் தாயாருக்கு வில்வ அர்ச்சனையே செய்யப்படுகிறது.

வில்வ மரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள் என்று சொல்லப்படுகிறது. சவுபாக்கிய சஞ்சீவினியில் லட்சுமி வில்வக்காட்டில் மரத்தடியில் தவம் செய்பவளாக வருணிக்கப்பட்டுள்ளது. வாமன புராணத்தில் லட்சுமியின் கைகளில் இருந்தே வில்வம் தோன்றியது என்று காத்யாயனர் கூறுகிறார்.

காளிகா புராணத்தில் லட்சுமி வில்வ மரங்கள் அடங்கிய காட்டிலேயே தவம் செய்தாள் என்று குறிப்பிடுகிறது.

## சின்ன... சின்ன ஆன்மிக செய்தி

காலை எழுந்தவுடன் தனது உள்ளங்கைகள், பசு, கோவில் கோபுரம், இறைவனின் திருவுருவப் படம் இவற்றை பார்க்கவேண்டும்

தினசரி விளக்கேற்றுவது சிறப்பு. செவ்வாய் மற்றும் வெள்ளிகளில் 5 முகம் கொண்ட விளக்கேற்றுவது இன்னும் சிறப்பு.

விளக்கை அமர்த்துதல் அல்லது மலையேற்றுதல் என்று தான் சொல்லவேண்டும். ‘அணைப்பது’ என்ற வார்த்தையை உபயோகிக்கவே கூடாது. அது அமங்கலச் சொல்லாகும்.

விளக்கை தானாக மலையேற விடக்கூடாது, ஊதியும் அமர்த்தக்கூடாது. புஷ்பத்தினாலும் மலையேற்றக்கூடாது. அப்போ எப்படித் தான் சார் மலையேற்றுவது என்று தானே கேட்க்கிறீர்கள்?

தீபத்தை எப்போதும் கல்கண்டை கொண்டு தான் அமர்த்தவேண்டும்.



## சிவலிங்கம்...!!

தேவர்கள் சிவலிங்க வழிபாடு செய்வதற்காகவே விசுவ கர்மாவிடம் பற்பல சாந்தித்யங்களோடு கூடிய சிவலிங்கங்களைப் பெற்றனர். அவை:

அசுவினி தேவர்கள் – மண்ணாலான லிங்கம்
இந்திரன் – பதுமராக லிங்கம்
எமதர்மன் – கோமேதக லிங்கம்
சந்திரன் – முத்து லிங்கம்
சரஸ்வதி – சொர்ண லிங்கம்
வருணன் – நீல லிங்கம்
வாயுதேவன் – பித்தளை லிங்கம்
விஷ்ணு – இந்திர லிங்கம்
நாகர்கள் – பவள லிங்கம்
பிரம்மன் – சொர்ண லிங்கம்
ருத்திரர்கள் – திருவெண்ணீற்று லிங்கம்
குபேரன் – சொர்ண லிங்கம்
மகாலட்சுமி – நெய்யினாலான லிங்கம்







# சனிபகவானுக்கு பிடித்த-பிடிக்காத செயல்கள்

1. நமச்சிவய எனும் நாமம் உச்சரிப்பவர்களை சனி பாதிப்பதில்லை.

2. பாவவினைகளுக்கு பரிகார மருந்து பிரதோஷ வழிபாடு. அதை தடையின்றி செய்பவர்களை சனி தண்டிப்ப்திில்லை.

3. காகத்திற்கு அன்னம் அளிப்பவர்கள், பித்ரு கடன் சரிவர செய்பவர்களை சனி கருணையுடன் பார்ப்பார்.

4. கருப்பு காராம் பசுவின் பால், நெய், தயிர் இவற்றுடன் பூஜிப்பவர்களை சனி மிகவும் விரும்புவார். அவர்களை சோதித்தாலும் பாதிப்பதில்லை.

5. ஆச்சார சீலர்கள், அனுதினம் சிவபூஜை செய்பவர்களை சனி நேசிப்பார்.

6. ஸ்திரவாரம் எனும் சனிக்கிழமை விரதமிருப்பதும், சுதர்சன எந்திர வழிபாடு செய்வதும் சனிக்கு பிடித்தமான ஒன்று.

7. எள்ளன்னம் வைத்து என்னாளும் துதிப்பவரை சனி நெருங்குவதே இல்லை.

8. வலம்புரி சங்குள்ள இல்லம், சாலகிராமத்தை பூஜிப்பவர்களை சனி படுத்துவதில்லை.

9. ருத்ராட்சம் அணிந்தவர்களை ருத்திர பிரியரான சனி பீடிப்பதில்லை.

10. உலர்த்தாத துணியை உடுத்துபவர்களை கண்டால் சனிக்கு கொள்ளை பிரியம். உடனே பற்றிக் கொள்வார்.

11. ஈரம் சொட்ட சொட்ட வீட்டினுள் செல்பவர்களை பார்த்தால் சனிக்கு அவர்கள் மீது பாசம் அதிகம், உடனே அவர்களை பீடித்துக் கொள்வார்.

12. முதல்நாள் உடுத்திய துணியை மறுநாளும் பயன்படுத்துபவர்களை பாத்தால் சனி மிகவும் பிடிக்கும். எப்படியும் சனி பிடித்துக் கொள்வார்.

13. குளிக்காமல் அசுத்தமாக இருப்பவர்களை கண்டாலும், தலைசீவாமல் தலைவிரி கோலமாக இருப்பவர்களை கண்டாலும் சனிக்கு பிடிக்கும்.

14. விளக்கேற்றப்படாமல் இருள் சூழ்ந்த இடங்கள், எப்போதும் அமங்கல சொற்களை பேசுபவர்களை கண்டால் சனிக்கு மிகவும் பிடித்தமானவர்கள். தன் தீயபார்வையால் எப்படியும் திரும்பி பார்ப்பார்.

15. சுத்தம் இல்லாத இடத்தில் சூன்யம் குடியிருக்குமே தவிர, திருமகள் இருக்க மாட்டாள். ஆனால் சனிக்கு அவ்விடங்கள்தான் அதிகம் பிடிக்கும்.

16. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை கொண்டு மற்றவரை வஞ்சித்து வாழ்பவரின் வாரிசுகளைகூட வாழவிடாமல் தண்டிக்க சனிக்கு பிடிக்கும்.

17. மாற்றான் மனையாளை பொண்டாள நினைக்கும் சண்டாளர்களை முதலில் ஊக்குவித்து, பின் அவமானப்படுத்திப் பார்ப்பதில் சனிக்கு நிகர் சனியே.

18. அன்றாடம் சுத்தம் செய்யாத வீட்டிலும், அனுதினம் அழுகுரல் கேட்கும் இல்லத்திலும் சனி நீங்காமல் நிரந்தரமாக இருப்பார்.

19. தாய்க்கு அடங்காத பெண்டீர், தகப்பனுக்கு அடங்காத தனயன், உடன்பிறந்தோரை வஞ்சிக்கும் துரோகி, இவர்களை சனி காலநேரம் பார்த்து தண்டிப்பார்.

# 64 விதமான தோஷங்களை நீக்கும் விஜயாபதி

பாரத பூமியின் தவசீலர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்களும், மகரிஷிகளும், மனிதர்களின் பாவங்களை தீர்த்து புண்ணியத்தை வழங்கிவரும் கங்கை நதியும் பாயும் காசி மாநகரை ஆட்சி செய்து வந்தவர் விஸ்வாமித்திரர். நீதி நெறிகள் வழுவாது ஆட்சி செய்து வந்தார். நாளடைவில் ஆட்சி அதிகாரம் அந்தஸ்து மீது ஆர்வம் குறைய தொடங்கியது, அப்போது விசிஷ்டரின் தவ பெருமையை அனைவரும் போற்றி மதித்து வந்தனர்.

விஸ்வாமித்திரர் மன்னராக இருந்தாலும் முனிவரான விசிஷ்டருக்கே புகழும் பெருமையும் இருக்கிறதே... பதவியும், அதிகாரமும் நிரந்தரமானவை இல்லை என்ற எண்ணம் நாளடைவில் விஸ்வாமித்திரருக்கு அடி மனம் வரை பரவியது. இதன் காரணமாக தனது அரசவையை கூட்டினார் விஸ்வாமித்திரர். அரச வாழ்வை துறந்து தவ வாழ்க்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்தார். அன்றே தனது அரச வாழ்வை துறந்து ஆண்டி கோலத்துடன் அரண்மனையில் இருந்து புறப்பட்டார். அடர்ந்த காட்டில் ஆஸ்ரமம் அமைத்தார். தவத்தை தொடங்கினார். தவ வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட பெயர் கௌசிகர், சத்திரியரான கௌசிகர் மன உறுதி மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

கபாலமும் வெடிக்கும் அளவுக்கு தவத்தை தொடர்ந்தார். கபாலத்தில் இருந்து பரவிய தவ ஜீவாலை எங்கும் அனலை பரப்பியது. எங்கு பார்த்தாலும் கடும் வெப்பம். மனிதர்கள் அலறினர். ஆனாலும் இவர் சத்திரியர் என்பதால் ஒருசில பிரிவினர் இவரை மதிக்காமல் புறக்கணித்தனர். இதனால் வெகுண்ட கௌசிகர், அதர்வண வேதத்தை தனது கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தார். புறக்கணித்த சமூகத்திற்கு எதிராக திரிசங்கு சொர்க்கத்தை உருவாக்கினார். கருப்பு நிற மனிதர்கள், எருமைமாடு, பனை மரம் என்று பல ஜீவராசிகளை படைக்கத் துவங்கினார்.

இதனால் உலகில் ஒருவித குழப்பமான சூழல் நிலவியது, இதனால் நாரத முனிவர் கௌசிகரை தேடி வந்து, உலக இயக்க ரகசியங்களையும், தனிமனித கர்ம பயன்களையும் எடுத்துரைத்தார். தவ சக்தியை கோபம் மூலம் குறைத்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். நாரதரின் அறிவுரையால் கௌசிகரின் கோபம் குறைந்தது. படைக்கும் தொழிலை விட்டு விட்டு தவத்தை மட்டும் தொடர முடிவு செய்தார்.

பிரம்மன் மூலம் காயத்ரி மந்திர உபதேசம் பெற்ற கௌசிகர் பெயரில் "கௌசிகர் கோத்திரம்" என்ற புதிய கோத்திரம் உருவானது. 27 நட்சத்திரங்களில்









திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திர மண்டலத்தின் தலைவராக கௌசிகர் (விஸ்வாமித்திரர்) பொறுப்பேற்றார்.

கௌசிக மகரிஷி இராமன் இலட்சுமணன் இருவரையும் அழைத்துச் சென்று, தில்லை வனக்காட்டில் ஒரு யாகம் நடத்தினார். அப்போது அந்த யாகத்தைக் கெடுப்பதற்காக தாடகை என்னும் அரக்கி வந்தாள். அவளை விஸ்வாமித்திரரின் கட்டளைப்படி ராமனும், லட்சுமணமு கொன்றனர். இதனால் இருவருக்கும் பிரம்மஹத்தி தோஷம் உண்டானது. அந்த பிரம்மஹத்தி தோஷம் நீங்கிட நவகலசயாகம் செய்த இடம் விஜயாபதி ஆகும்.

திலஹோமம், இராமேஸ்வரத்தில் செய்வதைக் காட்டிலும், விஜயாபதியில் செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்தது. பூர்வஜென்ம பாவங்களை பூரணமாக நிவர்த்தி செய்து தரும் சக்தி வாய்ந்த தலமாக விஜயாபதி திகழ்கிறது. ராஜரிஷியான விஸ்வாமித்திர மகரிஷி நெடு நாட்கள் தங்கியிருந்த தலம் இது.

ஸ்ரீவிஸ்வாமித்திர மஹாலிங்க சுவாமி திருக்கோயில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக விஸ்வாமித்ர மகரிஷியால் நிர்மாணிக்கப்பட்ட சிவாலயமாகும். இந்த விஸ்வாமித்திர மஹாலிங்க சுவாமி சன்னதிக்குப் பின்புறம் இந்த சித்தரின் ஜீவ சமாதி அமைந்திருக்கிறது.

எத்தனையோ பரிகாரங்கள் செய்தும் கடும் தோஷத்தால் அவதிப்படும் ஆத்மாக்களுக்கு ஒரு மாபெரும் வரப்பிரசாதம் விஜயாபதி. இங்கு வந்து நவகலச யாகம் செய்த பலருக்கு பூர்வ ஜென்ம பாபங்கள் விலகியிருக்கிறது.

நவகலச யாகம் செய்பவர்களுக்கு 64 வகையான தோஷங்கள் நிவர்த்தி ஆகின்றன. மதியம் 12 மணிக்கு பிறகு நவகலச யாகம் செய்தால் அனைத்து வித தோஷங்களும் விலகிவிடும்.

ஒன்பது கலசங்களில் ஒன்பது விதமான திரவப் பொருட்களை நிரப்பி நவக்கிரகங்களை ஆவாஹனம் செய்து மந்திரங்களை ஓதி இங்கிருக்கும் வில்ல மரத்தடியில் இந்த ஒன்பது கலச நீர்களும் உரிய ஜாதகரின் தலையில் ஊற்றுவார்கள். அதன் பிறகு ஈர ஆடையுடன்



ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கும் கடலில் நீராட வேண்டும். நீராடிய பின்னர் கடற்கரை மணலில் நெற்றி கடற்கரையில் படுமாறு இடதுபக்கம் மூன்று முறையும், வலது பக்கம் மூன்று முறையும் "ஓம் சிவ சிவ ஓம்" என ஜபித்தவாறே உருள வேண்டம். இப்படி மூன்று முறை செய்ய வேண்டும் இப்படி செய்தபின் எலுமிச்சை பழத்தினால் திருஷ்டி சுற்றிவிட்டு அந்த எலுமிச்சையை கடலுக்குள் வீசிவிடவேண்டும். இவ்வாறு செய்வதால் அனைத்து வித தோஷங்களும் நிவர்த்தி ஆகிவிடும். மேலும் அரை பர்லாங்கு தூரத்தில் இருக்கும் வனக்காளியம்மன் கோவிலில் பூஜை செய்து இனிப்புகள், எள் பதார்த்தம், பழங்களை தானம் செய்யவேண்டும். இத்துடன் நவ கலச யாகம் முற்றுப் பெறும்.

பின்னர் தில்லைவனக் காளியம்மன் கோயிலிலிருந்து திரும்பிப் பார்க்காமல், வேறு எங்கும் செல்லாமல் நேராக நமது வீட்டிற்கு வரவேண்டும். இப்படி செய்வதால், பிரேதசாபம், நவக்கிரக சாபம், குருசாபம், குல தெய்வ சாபம் போன்ற 64 விதமான தோஷங்கள் நீங்கிவிடும்.

இந்தக் கோயிலில் ஒரு சிறிய கிணறு இருக்கிறது. இந்தக் கிணற்றைத் தோன்டிப் பார்த்ததில், சாம்பல் நிறைய கிடைத்திருக்கிறது. இந்த சாம்பலை மேல்நாட்டைச் சேர்ந்த சிலரும் ஆராய்ச்சிக்காக எடுத்துச் சென்று சாம்பலின் வயது 17,500,000 ஆண்டுகள் என தெரிவித்துள்ளனர். எனவே இராமாயணம் நிஜம் என்பதற்கு இந்த விஜயாபதி விஸ்வாமித்ர மகாலிங்க சுவாமி திருக்கோயிலும் ஒரு ஆதாரம் ஆகும்.

இந்த கோயிலை பிற்காலத்தில் பாண்டிய



விஸ்வாமித்திருக்கு நடைபெறும் பூஜை

மன்னர்கள் திருப்பணி செய்து பராமரித்து வந்துள் ளனர். பாண்டிய மன்னர்களின் முத்திரையான இரட்டை மீன் சின்னம் இக்கோயிலின் மேல் பகுதியில் பொறிக்கப்பட்டு இருக்கிறது.

கோயிலின் வெளிப்பகுதியில் யாக குண்டம், விநாயகர் சன்னதி இருக்கிறது. விஸ்வாமித்திரர் மகாலிங்க மூர்த்தியையும், அகிலாண்டேஸ்வரி அம்மனும் மிக அற்புதமாக காட்சி தருகிறார்கள். ஆலயத்தை உருவாக்கிய ஸ்ரீ விஸ்வாமித்திரருக்கு தனிச் சன்னதி இருக்கிறது. இத்திருக்கோயிலின் அருகில் தில்லை வனக்காளிக்கு தனி சன்னதி உள்ளது. காளியின் திருமுகம் இலங்கை உள்ள திசையை நோக்கி இருக்கிறது.

விஜயாபதி ஸ்தலத்தில் தியானத்தின் பெருமையை உணரலாம், தியானத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பவர்கள் இங்கு வந்து தியானம் செய்தால் பல அற்புதங்கள் உணரலாம். மலடு, இனி குழந்தையே பிறக்காது என்று மனம் நொந்த தம்பதியர் இங்கு வழிபட்டால் மழலை செல்வத்தை பெறலாம். இத்திருக் கோவிலில் தீபம் ஏற்றி வைத்தால் தொழில் நிலைமை அபிவிருத்தி ஆகும். மேலும் இத்திருக்கோவிலில் அன்னதானம் செய்தால் வாழக்கையில் மிகப் பெரிய வளமான மாற்றங்கள் ஏற்படும். இங்கு பலகாலமாக வந்து வழிபடுபவர்கள் தங்களது வீடு, கடை போன்றவற்றிற்கு "விஸ்வம்" என்று பெயர் வைத்துள்ளனர்.



நவகலச யாகம்

கௌசிக நாடி என்று ஒன்று உள்ளது இந்த நாடியில் விஜயாபதி பற்றி குறிப்பு உள்ளது. பொதுவாக பரிகாரம் ஜாதகரின் ஜென்ம நட்சத்திரத்தில் செய்வது சிறப்பு. இல்லையென்றால் இறைவன் அவதரித்த நட்சத்திரத்தில் செய்வது சிறப்பாகும். விஸ்வாமித்திரர் அனுஷ நட்சத்திரத்தில் பிறந்துள்ளார். அந்த நட்சத்திரத்தில் பரிகாரம் செய்வது நல்லது. பூர்வ புண்ணியம் உள்ளவர்கள் இத்திருக்கோவிலுக்கு விஜயம் செய்வார்கள். விஸ்வாமித்திரர் மகரிஷிக்கு உள்ள ஒரே ஆலயம் விஜயாபதி ஆகும். இத்திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் அருகே உள்ள ராதாபுரத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

ஸ்ரீ அம்பாள் உபாசகர்
A.R.R. சுதர்சன ஐயங்கார், திருச்சி 17
போன் 9840369513





# வெள்ளிக்கிழமை – சனிக்கிழமை நகம் முடி ஏன் வெட்டக்கூடாது

வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஒரு அற்புத நாளாகும். பிற கிழமைகளைக் காட்டிலும் இந்த கிழமைகள் புனிதம் நிறைந்த கிழமைகளாகும். அம்மனுக்குரிய கிழமையாக இது கருதப்படுகிறது.

அம்மனுக்குரிய இந்த கிழமைகளில் ஒரு செயலை தொடங்கினால் அது வெற்றியாகவே அமையும். நல்லதொரு தொடக்கத்திற்கு உகந்த கிழமை தான் வெள்ளிக்கிழமை மற்றும் செவ்வாய் கிழமை.

அற்புதம் நிறைந்த இந்த கிழமைகளில் நகம் வெட்டக் கூடாது என்று சொல்வது ஏன் தெரியுமா?

நகம் வெட்டுவதற்கு நாள் என்ன, கிழமை என்ன என்று பலரும் சொல்வர். ஏன் இப்படி முன்னோர்கள் சொன்னார்கள் என்று யாரும் ஆராய்ச்சி செய்வதில்லை. அதை பற்றி தெரிந்து கொள்வதுமில்லை. முன்னோர்கள் ஏன் இப்படி சொன்னார்கள் என்பதை இங்கு தெரிந்து கொள் வோம்.

பொதுவாக சனிக்கிழமையை பெருமாளுக்கு உகந்த நாளாகவும், வெள்ளிக்கிழமையை மஹாலட்சுமி தாயாருக்கு உகந்த நாளாகவும் கருதுவது மரபு.

மஹாலட்சுமிக்குரிய அந்த நாளில் புதியதாக ஒரு பொருளை பெற வேண்டுமே தவிர இழக்கக் கூடாது என்பது ஐதீகம். நகம், முடி இரண்டுமே வெட்டினால் வளர்வது என்றாலும் அதுவும் நமது உடலில் ஓர் அங்கமாகும்.

பொருளை இழப்பதே தவறு என்றால் உடல் உறுப்பை இழப்பது இன்னும் அதிகப்படியான தவறு அல்லவா? அதனால் தான் வெள்ளிக்கிழமை நகம் வெட்டக் கூடாது என்று கூறுகிறார்கள்.

இதே போன்று காக்கும் தொழில் செய்யும் பெருமாளுக்கு உகந்த சனிக்கிழமைகளிலும், நமது உடலிலிருந்து எந்த பொருளையும் இழக்கக் கூடாது என்று நமது முன்னோர்கள் கருதிய காரணத்தால்தான் மேற்கண்ட கிழமைகளில் நகம் முடி போன்றவற்றை வெட்டுவதை தவிர்த் துள்ளனர்.

இது சாஸ்திரங்களின் அடிப்படையில் தோன்றியது கிடையாது என்றாலும் நம்பிக்கையின் பேரில் நமது முன்னோர்கள் சொன்னது.

மேற்கூறிய காரணம் ஒருசிலரால் இன்ற ளவும் கடைபிடிக்கப்பட்டுவருகிறது. மக்கள் நல் வாழ்விற்காக கூறப்பட்டதை நாமும் கடைபிடிப்பதில் தவறில்லையே.



# எந்த விதத்தில் முடியுமோ அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், ‘நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?’ என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி ‘நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?’ என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், ‘என்னால் இதற்கு மேல் பண்ணச் சக்தி இல்லையே!’ என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். ‘பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்’ என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்

www.aanmeegamalar.com






வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033



# சித்தர்களின் அரிய கண்டுபிடிப்பு அற்புதமான ரசமணி



வெறும் வைத்தித்தோடு நில்லாமல் யோகம், ஞானம் மார்க்கத்திலும் சிறந்தவர்களாக திகழ்ந்தார்கள். இவர்கள் கண்டறிந்த உலோக மாற்று இன்று வரை யாராலும் அவிழ்க்க முடியாத பரம ரகசியம். மிக சாதாரண உலோகங்களை தங்கங்களாக மாற்றும் வித்தையை ரசவாதம் என்பார்கள்.

இந்த சித்தர்களின் அரிய கண்டுபிடிப்புதான் இரசமணி. சித்தர்கள் ஒரிடத்தில் இருந்து வேறோர் இடத்திற்கு செல்ல இரசக்குளிகை என்னும் இரசமணியை பயன்படுத்தினார்களாம்.

முறையாக செய்யப்பட்ட இரசமணியை மந்திர ஜெபயங்கள் உருவேற்றி வைத்திருப்பார்கள். வேறிடம் செல்ல நினைக்கும் போது, இந்த இரசமணியை வாயில் போட்டுக் கொண்டால் காற்றில் பறக்கும் சக்தி அவர்களுக்கு வந்துவிடும். இந்த முறையில்தான் போகர் இந்தியாவில் இருந்து சீனாவிற்கு சென்றாக கோரக்க சித்தர் சொல்கிறார்.

பந்தபாசம் அற்றவர்களுக்கும், பணத்தாசை இல்லாதவர்களுக்கும் மட்டுமே மந்திர சித்தி கிடைக்கும். இந்த மந்திர சித்தியில் உள்ள மருத்துவப் பயன்கள் எண்ணில் அடங்கா.

மனித உடல் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று நிலைகளால் ஆனது. இம்மூன்றும் சமமாக இருக்கும் போது, உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. இந்த சமநிலை கெடும்பபோது ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

வாதம் என்பது நம் உடல் வளர்ச்சிக்கு உரிய வாயு. பித்தம் என்பது உடல் நம் உடலில் தங்கி இருப்பதற்கு உரிய வெப்பத்தை தரு வது, கபம் என்பது உடலுக்கு தேவையான குளிர்ச்சியைத் தருவது. இம் மூன்றும் கூடினாலும், குறைந்தாலும் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

அந்த வகையில் வாதம் கூடி குறைந்தால் 1482 வியாதிகளும், பித்தம் கூடிக் குறைந்தால் 1482 வியாதிகளும், கபம் கூடிக் குறைந்தால் 1482 வியாதிகளும் தோன்றுமாம். இதை சமநிலைப்படுவதுதான் இரசமணி.

இரசமணி அணிந்தால் உடல் சோர்வு நீங்கி சுறுசுறுப்பாக இருக்கும். இரத்த ஓட்டத்தை ஒரே சீராக இருக்க உதவுகிறது. இரத்தத்தை சுத்தி செய்து உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது, முக்கியமாக இரத்த அழுத்த சம்பந்தப்பட்ட நோய்களால் பாதிக்கபட்டவர்கள் இதை அணிவதால் இயல்பான வாழ்க்கைக்கு திரும்ப முடியும்.

குண்டலினியின் அடி நாதமான கருமையத்தை சுத்திசெய்யும் தன்மை இந்த இரசமணிக்கு உண்டு.

உடல் உறுப்புகள் சரியாக இயங்குவதற்கு இரசமணிகள் மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன.

இரசமணியை அணிந்துகொண்டால் சம்பந்தப்பட்டவரின் உள்ளொளி தூண்டப்பட்டு முகம் பிரகாசிக்கிறது. சிந்தனை, புத்திசாலித்தனம் மிளிரும்.

வயதானாலும் இளைமையுடன் வைத்திருக்கும் சக்தி இந்த ரசமணிக்கு எப்பொழுதும் உண்டு, மேலும் ரசமணி அணிபவரை தோற்ற பொலிவுடன் வைத்திருக்கும்.

பேய், பிசாசு, காத்து, கருப்பு மற்றும் துர் சக்திகளிடம் இருந்து நம்மை கத்து நிற்கும் சக்தி இதற்கு உண்டு.

செய்வினை கருப்பு, பில்லி, சூன்யம் போன்ற கெட்ட சக்திகளின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும், மீட்டு எடுக்கவும் இரசமணியை பயன்படும்.

நியாயமான வியாபாரம் மற்றும் தொழில் வளர்ச்சியின் வெற்றிக்கு பெரிதும் துணைபுரியும்.

வண்டி, வாகனங்களில் செல்லும்பொழுது விபத்துகளை தடுக்கும் தன்மை இரசமணிக்கு நிச்சயம் உண்டு.

ஞாபக சக்தியை மேலோங்கி நிற்கும், தம் பத்திய வாழ்க்கை மகிழ்ச்சியை தரும், கணவன் மனைவி ஒற்றுமை மேலோங்கும்.

சிறு குழந்தைகளுக்கு மிகவும் பாதுகாப்பு தருவதில் இரசமணி மிகவும் பயன்படும், குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் நோய்களில் இருந்து பாதுகாக்கும்.



இப்படி இதன் பலன்களை அடுக்கிக் கொண்டே போகலாம். திரவ நிலையில் இருக்கும் பாதரசத்தை மூலிகை சாறுகளால் சுத்தி செய்து, அதே மூலிகை சாற்றால் திடப் பொருளாக மாற்றி, மருத்துவ குணமாக்கி அணிந்து கொள்வதுதான் இரசமணி.

இரமணியை வைத்துக் கொண்டு அஷ்டமா சித்துக்களும் ஆடலாம் என்பது சித்தர்கள் வாக்கு. ஆனால் அந்த சூட்சம திறவுகோலை அவர்கள் விளக்கவில்லை. விளக்கியவைகளும் புரியும் நிலையில் இல்லை. ஒருவேளை கலியுகத்திற்கு இது தேவை இல்லை என்று நினைத்திருக்கலாம்.

நமக்கு அஷ்டமா சித்திகள் கை கூடா விட்டாலும் ஆரோக்கியம் கூடினால், நோயற்ற வாழ்வு அமைந்து விட்டால், எதிர்மறை சக்திகளில் இருந்து பாதுகாப்பு கிடைத்து விட்டால் போதும். அதற்கு இந்த இரசமணிகள் பெரிதும் உதவுகிறது.

தற்போது பல்வேறு வியாபார யுக்தியைப் பயன்படுத்தி உண்மையான ரசமணி என்ற பெயரில் போலிகளை விற்று ஏமாற்றி வருகின்றனர். ரசமணியை வாங்கும்போது நல்ல அனுபவமிக்கவரை உடன் அழைத்துச் சென்று வாங்குவது நல்லது.

## உண்மையான ரசமணியை கண்டறியும் சோதனைகள்:

1. இரும்பு சட்டியில் இட்டு உருக்க உருகிவிடும் பின்பு பழையபடி காட்டிகிவிடும்.
2. கீழே போட்டால் உடையாது,
3. உள்ளங்கையில் ரசமணியை வைத்து நடுவிரலால் மணியை தொட கரண்ட் ஷாக் போல அடிக்கும் (வாத, பித்த, கப நாடியை கட்டுக்குள் கொண்டு வரும் ) “விதியாளி காண்வான் பாரு” என்ற சித்தர்களின் கூற்றுப்படி விதி உள்ளவர்களுக்கு மட்டுமே ரசமணி வந்து அமையும் மேலும் அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை அனுபவிக்க முடியும்.

# பலவகையான தீட்சை





குரு இல்லா வித்தை பாழ் என்று நமது முன்னோர்கள் பழமொழியாகவே கூறியுள்ளனர். அந்த வகையில், அனைத்து கலைகளும் ஒரு குருநாதர் மூலம் கற்பது என்பது நமது பண்பாடாகவே அமைந்துள்ளது. குருநாதரின் அனுபவபூர்வமான செயல்விளக்கங்களால் போதிக்கப்பட்ட சீடனும், பல்வேறு கலைகளில் மேன் மேலும் வளர்ச்சியடைந்தார்கள். இந்த வழிமுறை இறைவழிபாடு சம்பந்தப்பட்ட கல்வியில் புகுந்த போது, ஒரு குருவின் தீட்சை என்பது கட்டாயம் பெறவேண்டும் என்றும் முன்னோர்களால் வகுக்கப்பட்டது. குரு தீட்சைகளைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

**தீட்ஷை:** `தீ' என்றால் மலம். `ஷை' என்றால் ஒழித்தல். மலமாகிய அழுக்கை ஒழித்தலே தீட்சை. மனிதன் இறைநிலையை அடைவதற்கு மந்திரக்கலை, தந்திரக்கலை, உபதேசக் கலை ஆகிய மூன்று படிநிலைகள் உள்ளன. மந்திரக்கலை, தந்திரக்கலை இரண்டும் சரியை, கிரியை, யோக நெறிமுறைகளில் உள்ள குருமார்கள் போதிப்பதாகும். நான்கு எழுத்து, ஐந்து எழுத்து, ஆறு எழுத்து, எட்டு எழுத்து உள்ளிட்ட பல மந்திரங்களை உச்சரித்து செய்யும் பயிற்சிகள் மந்திரக்கலை ஆகும். இதை போதிப்பவர்கள் மாந்திரீகர்கள் ஆவர். முத்திரைகளையும், யந்திரங்களையும் செய்யும் பயிற்சிகள் தந்திரக்கலை ஆகும். இதைப் போதிப்பவர்கள் தாந்திரீகர்கள் ஆவர். இந்த இரண்டு கலைகளைக் காட்டிலும் உன்னதமான, ஒப்புயர்வற்ற ஞானநிலைக்கான கலையே உபதேசக்கலையாகும். இதை போதிக்கும் குருமார்கள் ஞானகுரு ஆவார்கள்.

தம் சீடனுடைய ஆன்மாவைச் சார்ந்த அழுக்குகளை நீக்கி, அவனுடைய ஆன்மாவைத் தூய்மைப் படுத்தவும், ஞானம் ஊட்டவும், வேண்டிக் குருவானவர் செய்யும் கிரியை தீட்சை எனப்படும். தீட்சை என்னும் சொல் அழித்தல், கொடுத்தல் என்ற இரு பொருள் தருவது, ஆன்மாவின் அழுக்குகளை அழிப்பதும், இறைமைத் தன்மையைக் கொடுத்தலும் தீட்சையின் பயன்களாகும்.

ஒருவர் சைவ நெறியை மேற்கொள்வதாக இருப்பினும், வைணவ நெறியை மேற்கொள்வதாக இருப்பினும், வைதிக நெறியை மேற்கொண்டு ஒழுகுவதாக இருப்பினும், தகுதிவாய்ந்த குருமாரிடம் சென்று தக்க மந்திரத்தை அவரிடம் கேட்டு, அதனையே ஜெபித்துத் தம் இஷ்ட தெய்வத்தை வணங்கி வர வேண்டும் என்பது அடிப்படை விதி, இந்த அடிப்படை அமைய வேண்டியே **சமய தீட்சை** பெற்றுக் கொண்டு அதன் பிறகு ஆன்மிகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது விதி.

இதுபோன்று தீட்சை பலவகைகளில் வழங்கப் படும். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

## 1. நயன தீட்சை:

தன் பார்வையாலேயே சீடனுடைய பாவங்களைப் போக்கி அருள்பாலிப்பது நயன தீட்சை எனப்படும்.'அடிகளார் பார்வைபடுமாறு பார்த்துக்கொள்' என்று அன்னை அடிக்கடி பக்தர்கட்குக் கூறுவதன் உள்நோக்கம் நயன தீட்சை அளிப்பதற்காகவே, மீனானது தன் சினையைப் பார்த்த அளவில், சினைகள் மீன் வடிவம் பெறுதல் போல, குருவின் பார்வை பட்ட அளவில் சீடனும் தன்போல் சிவமாவான் என்று ஆகமங்கள் கூறும்.

## 2. ஸ்பரிச தீட்சை:

ஆசாரியன் தன் வலக்கையால் சீடன் தலை மேல் வைப்பது, நெற்றிப் பொட்டில் கை வைத்து அருள்பாலிப்பது, திருவடிகளைத் தலை மேல் வைப்பது ஸ்பரிச தீட்சை. திருவடிகளைச் சீடன் தலை மேல் வைத்து அருள்பாலிப்பது திருவடி தீக்கை என்றே கூறப்படும். கோழி, மூட்டையை அடைகாத்துக் குஞ்சு பொறிப்பது போலச் சீடனை பரிசத்தால் ஞானமயமாக்குவது இது!

## 3. வாசக தீட்சை:

குருவானவர், தம் சீடனுக்குத் தகுந்த மந்திரங்களை உபதேசித்து அவனை ஞானமயமாக்குவது வாசக தீட்சை எனப்படும்.பஞ்சாட்சர மந்திரம், பிரணவ மந்திரம்,ஹீ வித்யை, தத்துவமசி உபதேசம் என்பன வாசக தீட்சையில் அடங்கும்.

## 4. மானச தீட்சை:

சீடன் ஒருவன் எங்கோ இருந்து கொண்டு தன்னைத் தியானம் செய்யும் போது, அத் தியான சக்தி குருவை ஈர்க்கச் செய்யும். அத்தகைய காலங்களில் குரு தான் இருந்த இடத்திலிருந்து அவனுக்கு மனத்தால் அருள்பாலிப்பது மானச தீட்சை எனப்படும்.

## 5. சாஸ்திர தீட்சை:

சீடனுடைய சந்தேகங்களை நீக்க வேண்டிச் சாத்திரங்களை அருளுதல் சாஸ்திர தீட்சை எனப்படும். இருபா இருபது, உண்மை விளக்கம் என்ற சைவ சாத்திரங்கள் இதற்கு எடுத்துக் காட்டுகள்! அருச்சுனன் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டிக் கண்ணன் அருளிய பகவத் கீதை சாஸ்திர தீட்சைக்கு உதாரணம்.

## 6. யோக தீட்சை:

தன் சீடனுக்கு யோகப் பயிற்சிகளை அளித்து பிராணாயாம நுணுக்கங்களை கற்பித்துக் குண்டலினி சக்தியை எழுப்ப வேண்டித் தீட்சை அளித்தல், சமாதி நிலைக்கு அவன் முன்னேறி வர உதவுதல் யோக தீட்சை எனப்படும்.

## 7. ஔத்திரி தீட்சை:

சீடனை ஒரு வேள்விக் குண்டத்தின் முன் அமரவைத்து, சக்கரம் வரைந்து அக்கினி வளர்த்து, அவனுக்கு ஞானம் ஊட்டுவது ஔத்திரி தீட்சை எனப்படும்.

## 8. ஆசார்ய அபிடேகம்:

தன்னைப் போல ஒரு ஆசாரியன் ஆகிற அளவிற்குப் பக்குவம் பெற்ற சீடனுக்கு ஆசாரிய ஸ்தானம் அளிக்க வேண்டிச் செய்யப்படுவது ஆசாரிய அபிடேகம் எனப்படும். இந்த அபிடேகம் முடிந்த பிறகே ஒருவர் ஆசாரிய ஸ்தானத்தைப் பெறுகிறார்.

## தீட்சையால் ஏற்படும் மாற்றங்கள்

அருணாசல குரு என்பார் இயற்றிய நிஜானந்த போதம் என்ற நூலில்' தச தீட்சை 'எனப் பத்துவகைத் தீட்சைகளைக் கூறுகிறது. சீடனுடைய உடம்பிலும், உள்ளத்திலும் தீட்சையால் உண்டாகும் மாற்றங்களையும் கூறுகின்றது.

1. முதல் தீட்சையைல் ரோம துவாரங்கள் வழியாகத் கெட்ட நீர்கள் வியர்வையாய்க் கசியும்.
2. இரண்டாவது தீட்சையில் வாத, பித்தம் சிலேத்துமம் என்ற மூன்று தோஷங்கள் நீங்கும்.
3. மூன்றாவது தீட்சையில் பழைய கெட்ட உதிரங்கள் கசியும்.
4. நான்காவது தீட்சையால் சர்ப்பம் தோலுரிப்பது போலச் சரீரத்தில் தோலுரியும்.
5. ஐந்தாவது தீட்சையால் சட்டை கழன்று தேகம் சிவந்த நிறமாகும். பஞ்ச மூர்த்திகள் கோரியதைத் தருவார்கள்.
6. ஆறாவது தீட்சையில் சட்டை கழன்று சுழுமுனை வாசல் திறந்து தூர திருஷ்டி தெரியும்.
7. ஏழாவது தீட்சையில் சட்டை வெளுப்பாய்க் கழன்று தேகம் தூபம் போலப் பிரகாசிக்கும்.
8. எட்டாவது தீட்சையில் உடம்பை உயரத் தூக்கும். கூடு விட்டுக் கூடு பாயும் வல்லபம் உண்டாகும்.
9. ஒன்பதாவது தீட்சையில் தேகம் சூரியப் பிரகாசம் அடையும். அட்டமா சித்தியும் கைகூடும். தேவர்கள் சீடனுக்கு ஏவல் புரிவர்.
10. பத்தாவது தீட்சையில் தேகம் தீபம் போலப் பிரகாசிக்கும். சொரூப சித்தி கூடும். அண்டத்தில் மௌனம் நரை திரை, மூப்பு, பிணி, மரணம் ஏற்படாது. இத் தீட்சைகளால் பக்குவம் பெற்ற சீடன் உடம்பு, மனம், ஆன்மா, மூன்றும் ஞானம் பெறத் தகுதி பெறுகின்றன.

# கலியுகத்தில் அதிகம் நடைபெறும் துர் செயலுக்குரிய நரகம்

நரகம் என்பது உண்மையில் இருக்கின்றதா? இல்லையா? என்கிற பல கேள்விகள் பல்வேறு தருணங்களில் எழும்பினாலும், இந்து தர்மப்படி பூமியில் பிறக்கும் உயிர்களில் பாவங்கள் செய்த ஆன்மாவிற்கு தண்டனை விதிக்கும் உலகமே நரகம் என்று பல்வேறு புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

இதன் அரசராக யம தேவனும், பாவ புண்ணியங்களை கணக்கிடும் பணியாளனாக சித்ரகுப்தன் உள்ளனர். அந்த வகையில் நரகத்தை நான்கு வகையாகவும் பிரித்துள்ளனர்.

தாமிஸிர நரகம், அநித்தாமிஸ்ர நரகம்,

ரௌரவ நரகம், மகா ரௌரவ நரகம்

மேற்கண்ட நான்கு நரகங்களைப் பற்றி மகாபுராணங்களில் ஒன்றான கருட புராணம் விரிவாக எடுத்துரைக்கிறது. தற்போது நடைபெறும் கலியுகத்தில் சர்வ சாதாரணமாக நடைபெறும் ஒருசில பாவச் செயல்களை மட்டும் தொகுத்து அதற்குரிய நரகங்களையும் தண்டனைகளையும் மட்டும் பார்ப்போம்.

கருட புராணம்: வைணவ புராணமான இதில் விஷ்ணுவும் கருடனும் உரையாடுவது போன்று அமைந்துள்ளது.

மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கை, ஈமச் சடங்குகள் மற்றும் மறுபிறவி போன்றவைகளைப் பற்றி இதன் இரண்டாம் பகுதி விளக்குகிறது.

இப்புராணத்தில் வானியல், மருத்துவம், இலக்கணம், நவரத்தின கட்டமைப்பு மற்றும் பண்புகள் பற்றி விவாதிக்கிறது.

மொத்தம் பத்தொன்பது ஆயிரம் செய்யுட்கள் கொண்ட இப்புராணம், பூர்வ கந்த மற்றும் உத்திர கந்த என்ற இரண்டு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

மனிதர்கள் புரியும் அனைத்து தீய செயல்களுக்கும் அதற்கேற்ப வழங்கப்படும் தண்டனையை மிக தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. அந்த வகையில் சிலசெயல்களும் அச்செயலுக்குரிய நரகங்களும், அந் நகரத்தில் வழங்கப்படும் தண்டனையையும் பார்ப்போம்.

1. தாமிஸிர நரகம்: பிறருக்குச் சொந்தமான மற்றவர் மனைவியை விரும்புதல் அல்லது அபகரித்தல், பிறரது குழந்தையை அபகரித்தல், பிறரது பொருளை ஏமாற்றி அபகரித்தல் நரகத்தில் எமகிங்கரர்கள் முள்ளாலான கட்டைகளாலும் கதைகளாலும் அடிப்பார்கள்.

2. அநித்தாமிஸ்ர நரகம்: கணவனும் மனைவியும் சேர்ந்து வாழாமல் ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல், கணவன் மனைவியை வஞ்சித்தலும் மனைவி கணவனை வஞ்சித்தலும். உழன்று, கண்கள் தெரியாத நிலையில் இருள்சூழ மூர்ச்சையாகி விழுந்து தவிப்பார்கள்

3. ரௌரவ நரகம்: பிறருடைய குடும்பத்தை, அதாவது வாழும் குடும்பத்தைக் கெடுத்தல், பிரித்தல், அழித்தல், அவர்களின் பொருள்களைப் பறித்தல். பாவிகளை எமகிங்கரர்கள் சூலத்தில் குத்தித் துன்புறுத்துவார்கள்.

4. மகா ரௌரவ நரகம்: மிகவும் கொடூரமாக பிறர் குடும்பத்தை வதைத்தல், பொருளுக்காக குடும்பங்களை நாசம் செய்தல். குரு என்ற கோரமான மிருகம் பாவிகளைச் சூழ்ந்து,முட்டி மோதி பலவகையிலும் ரணகளப்படுத்தி துன்புறுத்தும்.

5. கும்பிபாகம்: சுவையான உணவுக்காக, வாயில்லா உயிர்களை வதைத்தும் கொன்றும் பலவிதங்களில் கொடுமைப்படுத்துதல் எரியும் அடுப்பில் வைக்கப்பட்டுள்ள எண்ணெய்க்கொப்பறையில் போட்டு, எமதூதர்கள் பாவிகளைத் துன்புறுத்துவார்கள்.

6. காலகுத்திரம்: பெரியோர்களையும் பெற்றோர்களையும் அடித்து அவமதித்தல், துன்புறுத்தியும் பட்டினி போடுதல். அதே முறையில் அடி, உதை, பட்டினி என்று அவர்கள் வதைக்கபடுவார்கள்.

7. அசிபத்திரம்: தெய்வ நிந்தனை செய்தல், தர்மநெறியைவிட்டு அதர்ம நெறியைப் பின்பற்றுதல் பாவிகள் பூதங்களால் துன்புறுத்தப்பட்டு இனம் புரியாத ஒரு பயமுடன் அவதிப்படுவார்கள்.

8. பன்றி முகம்: குற்றமற்றவரைத் தண்டித்தல், நீதிக்குப் புறம்பாக அநீதிக்குத் துணைபோதல் பன்றிமுகத்துடனும் கூர்மையான பற்களுடனும் உள்ள ஒரு மிருகத்தின் வாயில் அகப்பட்டு, கூர்மையான பற்களால் கடிக்கப்பட்டு பாவிகள் தண்டிக்கப்படுவார்கள்.

9. அந்தகூபம்: உயிர்களைச் சித்திரவதை செய்தல், கொடுமையாகக் கொலை செய்தல். கொடிய மிருகங்கள் கடித்துக் குதறும் நிலை ஏற்படும். விசித்திரமான மாடுகள் கீழே போட்டு மிதித்துத் துன்புறுத்தும்.

10. அக்னிகுண்டம்: பிறருக்கு உரிமையான பொருள்களை, தனது வலிமையாலும் செல்வாக்காலும் அபகரித்து வாழ்தல், பலாத்காரமாக தனது காரியங்களை நிறைவேற்றிக்கொள்தல். பாவிகள் ஒரு நீண்ட தடியில் மிருகத்தைப்போல் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் எரியும் அக்னிகுண்டத்தில் வாட்டி எடுக்கப்படுவார்கள்.

11. வஜ்ரகண்டகம்: சேரக்கூடாத ஆணையோ பெண்ணையோ கூடித்தழுவி மகிழும் காம வெறியர்கள் அடைதல் நெருப்பால் செய்யப்பட்ட பதுமைகளைக் கட்டித்தழுவ ஜீவன்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

12. கிருமிபோஜனம்: தான் மட்டும் உண்டு, பிறரது உழைப்பைச் சுரண்டிப்பிழைத்தல். பிறவற்றைத் துளைத்துச் செல்லும் இயல்புடையது கிருமிகள் மூலம் பாவிகள் கடித்துத் துளையிட்டு துன்புறுத்தப்படுவார்கள்

13. சான்மலி: நன்மை, தீமை, பாபம் ஆகியவற்றைப் பாராமல், உறவுமுறையைக்கூடப் பாராமல் யாருடனாவது எப்படியாவதுகூடி மகிழுதல். பாவிகளை முள்ளாலான தடிக ளாலும் முட்செடிகளாலும் எமகிங்கரர்கள் துன்புறுத் துவார்கள்.

14. வைதரணி: நல்வழிகளில் செல்லாமல் தர்மத்துக்குப் புறம்பாக நடந்தல். வைதரணி என்ற ரத்தமும், சீழும், சிறுநீரும், மலமும், கொடிய பிராணிகளும் இருக்குமொரு நதியில் பாவிகள் விழுந்து துன்பப்படுவார்கள்.

15. பூபோதம்: சிறிதும் வெட்கமின்றி இழிவான பெண்களுடன் கூடுதல், ஒழுக்கக்குறைவாக நடத்தல், எந்த லட்சியம் இன்றி வாழ்தல் பாவிகளை விடமுடைய பூச்சிகள், பிராணிகள் கடிக்கும்.

16. பிராணி ரோதம்: பிராணிகளைக் கொடுமைப்படுத்தல் கூர்மையான பாணங்களை பாவிகளின் மீது எய்து துன்புறுத்துவார்கள்.

17. விசஸனம்: பசுக்களைக் கொடுமை செய்தல். பாவிகளுக்கு எமகிங்கரர்கள் சவுக்கடி கொடுத்துத் துன்புறுத்துவார்கள்.

18. லாலா பக்ஷம்: மனைவியைக் கொடுமைப்படுத்தி முறையற்ற மோக இச்சைக்கு ஆளாக்கிக் கெடுத்தல். பாவிகளும் அதே முறையில் வதைக்கப்படுவார்கள்.

19. சாரமேயாதனம்: வீடுகளை தீவைத்தல், சூறையாடுதல், உயிர்களை வதைத்தல், விடத்தைக் கொடுத்துக் கொல்லுதல், மக்களைக் கொன்றுகுவித்தல் விசித்திரமான கொடிய மிருகங்கள் பாவிகளை வதைக்கும்.

20. அவீசி: பொய்சாட்சி சொல்தல் நீர்நிலைகளில் ஜீவன்களைத் தூக்கிவீசி அழுத்தப்படும்.



# பூசைக்கு சிறப்பான பூக்கள்

**திருமாலுக்கு**
பவளமல்லி,
மரிக்கொழுந்து, துளசி

**சிவன்**
வில்வம் செவ்வரளி

**முருகன்**
முல்லை, செவ்வந்தி, ரோஜா

**அம்பாளுக்கு**
வெள்ளை நிறப்பூக்கள்

## பூசைக்கு ஆகாதபூக்கள்

**விநாயகருக்கு**
துளசி

**சிவனுக்கு**
தாழம்பூ

**அம்பாளுக்கு**
அருகம்புல்

**பெருமாளிற்கு**
அருகம்புல்

**பைரவர்**
நந்தியாவட்டை

**சூரியனுக்கு**
வில்வம்

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# கோவிலில் செய்யக்கூடாதவை

கர்ப்ப கிரஹத்தினுள் கடவுளுக்கு அலங்காரம் நடக்கும்போது திரையிட்டுருப்பார்கள். அச்சமயம் வழிபடுதல் கூடாது. கையில் விளக்கு ஏந்தி ஆராதனை காட்டக்கூடாது.

சுவாமிக்கும் பலி பீடத்திற்கும் குறுக்கே செல்லக்கூடாது. பலிபீடம், விக்ரஹம் ஆகியவற்றின் நிழலை மிதித்தல் கூடாது.

விபூதி, குங்குமம், பிரசாதம் வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டபின் மீதமானவற்றை கீழே கொட்டுதல் சுற்றுத் தூண்களில் தடவுதல் கூடாது. மீதமானவற்றை ஒரு தாளில் மடித்துச் சென்று வீட்டின் பூஜையறையில் வைத்துக் கொண்டு தினசரி இட்டுக் கொள்ளலாம்.

விபூதி, சந்தன அபிஷேகம், பால் அபிஷேகம் தவிர சுவாமிக்கு இதர திருமஞ்சனம் ஆகும்போது பார்க்க கூடாது. அபிஷேகம் நடக்கும் பொழுது கோவிலைச் சுற்றி வரகூடாது

கோவிலில் உள்ள திருவிளக்குகளை கையால் தூண்டவோ தூண்டிய கையை சுவரில் துடைக்கவோ கூடாது. மீதியிருக்கும் எண்ணையை தலையில் தடவிக் கொள்ள கூடாது.

சுவாமிகளை தொடுவது, சுவாமிகளின் திருவடிக்கடியில் கற்பூரம் ஏற்றுதல் கூடாது.

ஆண்கள் சட்டை அணிந்து செல்வதை தவிர்ப்பது நல்லது. லுங்கி அணிந்து செல்லுதல் கூடாது. அதிக அழுத்தமான வண்ண உடை ஆடம்பரமான உடை அணிந்து செல்லக் கூடாது. இது மற்றோரின் கவனத்தை திசை திருப்பிவிடும். தலையில் துணி, தொப்பி அணியக்கூடாது கோவிலை வேகமாக வலம் வருதல் கூடாது. அடிமேல் அடி வைத்து வலம் வரவேண்டும்.



www.aanmeegamalar.com





# அவசியம் அறிய வேண்டிய ஆன்மிக தகவல்கள்

நந்தியையும் பலிபீடத்தையும் சேர்த்தே பிரதட்சிணம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதனால் கிடைக்கும் பலன்கள்:

3 முறை செய்தால் நினைத்தது நடக்கும்.
5 முறை செய்தால் வெற்றி உண்டாகும்.
7 முறை செய்தால் நல்ல குணம் ஏற்படும்.
9 முறை செய்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.
11 முறை செய்தால் நீண்ட ஆயுள் கிடைக்கும்.
13 முறை செய்தால் வேண்டுதல் நிறைவேறும்.
15 முறை செய்தால் செல்வம் கிடைக்கும்.
17 முறை செய்தால் செல்வம் பெருகும்.
108 முறை செய்தால் அஸ்வமேத யாகப் பலன்.
1008 முறை செய்தால் ஒருவருட தீட்சை யாகப்பலன்



❖ தரையில் கை ஊன்றிச் சாப்பிடக்கூடாது.

❖ துணி இல்லாமல் குளிக்கக் கூடாது.

❖ நெருப்பை வாயினால் ஊதக்கூடாது.

❖ செவ்வாய், வெள்ளிக் கிழமைகள், சதுர்த்தி, சதுர்த்தசி, சஷ்டி, பௌர்ணமி, நவமி ஆகிய திதிகளில் முடிவெட்டுதல் கூடாது ஆனால் அந்தத் திதி அமையும் நாள் ஞாயிறு அல்லது வியாழனாயிருந்தால் மேற்படிதிதி தோஷம் இல்லை.

❖ அசுத்தமான பொருள்களை நெருப்பில் போடக்கூடாது. அத்துடன் துடிதுடிக்கப் புழுபூச்சிகளை நெருப்பில் போடுவது பிரம்மகத்திதோஷத்தை உண்டாக்கும்.

❖ ஆலயத்தில் இரவுநேரத்தில் குளிக்கக் கூடாது. கங்கையில் மட்டும் எந்த நேரமும் குளிக்கலாம். ஈரத்துணியைத் தண்ணீரில் பிழியக்கூடாது, உதறக்கூடாது

❖ தண்ணீரிலும், எண்ணெய்யிலும் நம் நிழலை நாம் பார்க்கக்கூடாது.

❖ இருட்டிலோ, நிழல் விழும் இடங்களிலோ அமர்ந்து உண்ணக்கூடாது.வெளிச்சத்தில் அமர்ந்தே உண்ணவேண்டும்.

❖ உண்ணும்போது முதலில் இனிப்பையும், முடிவில் கசப்பையும் உண்ணவேண்டும்.

❖ ஈர ஆடையுடனும், தலைமுடியை அவிழ்த்துவிட்டும் உண்ணக்கூடாது.

❖ நெல்லிக்காய், இஞ்சி, தயிர், வறுத்தமா. இவற்றை இரவில் உண்ணக் கூடாது.

❖ உறவினர்களை ஊருக்கு அனுப்பிவிட்டு உடனே எண்ணெய் தேய்த்து நீராடக் கூடாது.

❖ கன்றுக்குட்டி,மாடு ஆகியவை

www.aanmeegamalar.com



# அற்புத மகிமை வாய்ந்த ருத்ராட்சம்

**ருத்ராட்சத்தை அணிவதாயின் சிவப்பு நிற நூலில் அணியவேண்டும். அல்லது செம்புக் கம்பியிலோ, தங்கக் கம்பியிலோ, வெள்ளிக் கம்பியிலோ அணியலாம். ஒரு சிவனடியாரிடம் இருந்து ருத்ராட்சத்தை அணியும் வழிமுறைகளை கேட்டு**



பத்ராட்சம் என்ற மணி ருத்ராட்சம் போலவே இருக்கும், அவை நல்ல பலன்களைத் தராது. உண்மையான ருத்ராட்சத்தை நீரில் போட்டால் மூழ்கி விடும் போலியானவை மிதக்கும். மேலும் கல்லில் உரைக்கும் போது தங்க நிற கோடுகள் கல்லில் பதியும். இரு செம்பு நாணயங்கள் நடுவில் ருத்ராட்சத்தை வைத்தால், மின் சுழற்சியின் காரணமாக அது சுழலும். இவ்வாறு உண்மையான ருத்ராட்சத்தை சில ஆய்வுகள் மூலம் கண்டறியலாம். தாவர வகைகளில் மின் காந்த சக்தி ஒரு குறிப்பிடும் அளவு உள்ளது ருட்ராட்சதில் மட்டும்தான்.

எவ்வித மந்திரங்களை உச்சரிக்காதவனும், எவ்வித யாகங்களைச் செய்யாதவனும் கூட ருத்ராட்ச மணிகளை வெறுமனே தொடு வதன்மூலம் தன் பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டு மறுபிறவியில் ருத்ரனாகவே அவதரிக் கிறான்.

ருத்ராட்சத்தை அணிபவனும், வழிபடுபவனும் சம்சார பந்தங்களிலிருந்து விடுபட்டு, தொடர விருக்கும் அனேக கோடி பிறப்புகளிலிருந்தும் விடுபடுகிறான்.

ருத்ராட்சம் அணிந்த ஒருவனுக்கு உணவும், உடையும் தருபவனும், ருத்ராட்சம் அணிந்த சிவனடியார்களின் பாதங்களைக் கழுவிய நீரை தீர்த்தமாக ஏற்றுக்கொள்பவனும் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு, சிவலோகத்தை அடைகிறான்.

நம்பிக்கையோடும்,நம்பிக்கையில்லாமலும் ருத்ராட்சத்தை அணிந்துகொள்பவன் ருத்ர அம்சத்தைப் பெறுகிறான்.

ருத்ராட்சத்தின் மகிமையை என்னாலும் விளக்கிக் கூற முடியாது என்று சிவபெருமான் தேவிக்கு உரைத்ததாக ஸ்ரீமத் தேவிபாகவதம் கூறுகிறது.

அனைத்துவித ஸ்தோத்திரங்களை உச்சரிப் பதன் மூலமும், விரதங்களை அனுசரிப்பதன் மூலமும் அடைகின்ற பலனை,ஒருவன் ருத்ராட் சத்தை அணிந்து கொள்வதன் மூலம் பெறுவான்.

ருத்ராட்ச மாலையை அணிந்தவருக்கு ஒருவன் உணவு அளிப்பானாகில், அவனது 21 தலைமுறை மக்களும் பாவங்களிலிருந்து விடு பட்டு ருத்ரலோகத்தை அடைவார்கள்.

சண்டாளனாகப் பிறந்தவனும், ருத்ராட்சத் தோடு தொடர்பு கொள்வானாயின் அவனது பாவங்கள் அவனை விட்டு விலகி ஓடிவிடும்.

கள் உண்பவனும், மாமிசம் உண்பவனுமாகிய பாவியின் தலையில் ருத்ராட்சம் படுமேயானால் அவனது பாவங்கள் அனைத்தும் விலகும்.

ருத்ராட்சமாலையை ஒருவன் வெறுமனே கையில் பிடித்திருந்தாலும், நான்கு வேதங்கயைும், சாஸ்திரங்களையும், உபநிடதங்களையும் கற்ற றிந்தவனைவிட சிறப்பு பெறுவான்.அனைத்துக் கல்வி வேள்விகளும் அவன் வசமாகின்றன. பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனைவிட அதிக பலனைப் பெறுகிறான்.

ஒருவன் மரணம் அடையும் தரு வாயில் ருத்ராட்சத்தை தரித்துக் கொண்டிருப்பானாகில், அவன் இறந்தபின் ருத்ர லோகத்தை அடைகிறான்.

பிறப்பால் ஒருவன் பிராமணனோ அல்லது சண்டாளனோ அல்லது மிலேச்சனோ; உண்ணக் கூடாததை உண்பவனோ யாராகிலும் அவன் ருத்ராட்சத்தை அணிவானாகில் அவன் ருத்ரனுக்கு இணையாகிறான்.

ருத்ராட்சத்தைத் தலையில் தரிப்பவன் கோடி புண்ணியங்களைப் பெறுவான். காதுகளில் அணிபவன் பத்துகோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்;கழுத்தில் அணிபவன் நூறுகோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்; பூணூலில் அணிபவன் ஆயிரம் கோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்;கைகளில் அணிபவன் லட்சம் கோடிப் புண்ணியத்தைப் பெறுகிறான்; இடுப்பில் அணிபவன் மோட்சத்தை அடைகிறான்.

குழந்தைகள் ருத்ராட்சம் அணிந்தால் ஜீரணம் சரியாக இருக்கும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும், கல்வியை சிறந்த முறையில் பயில்வார்கள்.

கண், மூக்கு, தொண்டை, காது நோய்கள். மூளைக் கோளாறு, இருதயக் கோளாறு, நுரையீரல் கோளாறு, ஞாபக மறதி, நரம்புக் கோளாறு, ஆண் மலட்டுத்தன்மை, தைராய்டு சுரப்பிக் கோளாறு, ரத்த அழுத்தம், சளி தொந்தரவு, கல்லீரல் நோய், நீரிழிவு நோய், கருப்பைக் கோளாறு, சிறுநீரக நோய், தூக்கமின்மை, அஜீரணம், எலும்பு நோய், மூட்டு வலி, பக்கவாதம், அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுதல், வலிப்பு நோய், தீராத வயிற்று வலி, தோல் நோய், திக்குவாய், உடல் பலவீனம் மற்றும் பல வகையான நோய் களுக்கு அவற்றிற்குரிய ருத்ராட்சம் எது என அறிந்து அதற்குரிய ருத்ராட்சத்தை அணிந்தால் விரைவில் பயன்தரும்.

ருத்ராட்சத்தை அணிந்தவாறு, வேத நியமங்களை ஒருவன் கடைபிடிப்பானாகில் அவன் பெறும் பலன்களை அளவிட முடியாது;

கழுத்தில் ருத்ராட்ச மாலையை அணிந்தவன் இந்த உலகத்தளைகளிலிருந்து விடுபடுகிறான்.

ருத்ராட்சம் அணிந்தவன் சிவபெருமானைப் போலவே முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் வணங்கப்படுகிறான்.

ருத்ராட்சத்தைத் தலையில் தரித்து ஒருவன் நீராடுவான் எனில், ருத்ராட்சத்தைத் தொட்ட நீர் அவன் உடலைத் தீண்டுமாயின், அது கங்கையில் நீராடியதைவிட அதிகப்புண்ணியப்பலன்களைத் தரும்.

ருத்ராட்சம் என்ற சொல் ருத்ரனையே குறிப்பதாக இருப்பதால் இந்த ருத்ராட்சத்தை சிவபெருமானுக்கு இணையான மதிப்பளித்து போற்றி பாதுகாக்க வேண்டும்.



ஆன்மிகமலர் மெயில் புக்

# விளக்கின் சிறப்புகள்

விளக்கின் முக்கியத்துவம் ஒரு தெய்வத்தை வணங்குவது என்பது நம் அனைவருக்கும் நம்பிக்கை சார்ந்த ஒன்று. வீட்டில் ஒரு பூஜை அறை ஏற்படுத்தி, அதை நன்கு அழகுபடுத்துவோம். அதில் நமக்குப் பிடித்த தெய்வங்களின் படங்கள் அல்லது சிலைகளை வைத்து, தினமும் பூஜை செய்து வருவோம். நமது வசதிக்கு ஏற்ப பூஜை பொருட்களை வாங்குவோம். பூஜை பொருட்களான கலசம், சங்கு, செம்புத் தட்டு, செம்புக் குவளை (பஞ்ச பாத்திரம்) சிறு கரண்டி (உத்ருணி), விளக்கு போன்ற பூஜை பொருட்களை நாம் அறிவோம். ஒவ்வொரு பூஜை பொருளும் ஒரு தனிச்சிறப்புப் பெற்றது. பூஜையின் முக்கியப் பொருளான விளக்கின் சிறப்பைப் பற்றி நாம் இங்கு தெரிந்துகொள்வோம்.

1. இந்து தருமத்தில் விளக்கின் முக்கியத்துவம். சனாதன இந்து வைதீக தருமத்தில் விளக்குக் கென்று தனி சிறப்பிடம் உண்டு. அது நெருப்பின் வடிவமாகவும், குறியீடாகவும் கொள்ளப்படுகிறது. விளக்கு இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு இட்டுச் செல்லும் எனும் பொருள் கொண்ட 'தமசோ மா ஜ்யோதிர்கமய' என்ற ஸ்லோகம் நமக்குத் தெரியும். மனிதர்களுக்கு அமைதியை யும், ஒளியையும் தரும் கருவியாக அது ஒளிர் கிறது. இதுவே இதன் சிறப்பு. சாத்திரங்கள் விளக்கு பற்றி என்ன கூறுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முயல்வோம். பூஜை பொருட்களிலேயே விளக்கு முக்கியமான ஒரு பொருளாகும். அதன் முக்கியத்துவத்தை பூசையின்பொழுது சொல்லப்படும் பின்வரும் மந்திரம் விவரிக்கிறது. भोदीपब्रह्मरूपस्त्वं ज्योतिषांप्रभुरव्यय: ॥ आरोग्यंदेहपुत्रांश्चमत:शांतिं प्रयच्छमे ॥ பொருள் : ஓ, விளக்கின் தேவதையே, நீ பிரம்மத்தின் (பரம்பொருளின்) வடிவம். நீ நிறைந்த ஒளி வீச்சாக இருக்கிறாய். நீ வற்றுவதே இல்லை. தயவுகூர்ந்து எனக்கு செல்வத்தையும் நன்மக்கட் பேறையும் அளிப்பாயாக. தயவுகூர்ந்து என் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பாயாக..

2. எண்ணெய் மற்றும் நெய் விளக்கின் தன்மைகள்: விளக்கிற்கு எண்ணெய் அல்லது நெய் தான் பயன்படுத்தவேண்டும்,வேறு எந்த எரிபொருளையும் பயன்படுத்தக்கூடாது என அக்னிபுராணம் மிகத்தெளிவாகக் கூறுகிறது. ஆன்மீக அறிவியலின்படி, எண்ணெய் விளக்கைவிட நெய் விளக்கு அதிக சாத்வீகத் தன்மை கொண்டது. இது முக்கியமான ஒன்றாதலால், இதுபற்றி விளக்கமாகப் பார்ப்போம் நெய்விளக்கிற்கும், எண்ணெய் விளக்கிற்கும் உள்ள வேற்றுமைகளைப் நாம் இப்பொழுது பார்ப்போம்.

நெய்யைவிட எண்ணெய்தான் பொதுவாக விளக்கிற்குப் பயன்படுத்தப்படுகிறது எண்ணெய் விளக்கு அதிக நேரம் எரியும். நெய் விளக்கு குறைந்த நேரமே எரியும்.இந்த வேறுபாட்டை ஆன்மீக நோக்கில் நாம் பார்ப்போம். 1. எண்ணெய் விளக்கைவிட நெய்விளக்கு சுற்றியுள்ள காற்று மண்டலத்திலிருந்து, சாத்வீக அதிர்வுகளை அதிக அளவில் ஈர்க்கும் திறன் கொண்டது. 2. எண்ணெய் விளக்கு அதனைச் சுற்றியுள்ள மண்டலத்திலிருந்து அதிகமாகப் போனால் ஒரு மீட்டர் தூரத்தில் உள்ள சாத்வீக அதிர்வுகளையே ஈர்க்கும். ஆனால் நெய்விளக்கு வானில் உள்ள சொர்க்க உலகம் வரையுள்ள சாத்வீக அதிர்வுகளை ஈர்க்கும் வல்லமை கொண்டது. 3. எண்ணெய் விளக்கு எரிந்து முடிந்தபின், காற்றுமண்டலத்தில் உள்ள ரஜோகுணத் துகள்கள் அதிகரித்து, அது ஒரு அரைமணிநேரம் வரை நீடிக்கும் ஆனால் சாத்வீகத்தன்மை கொண்ட நெய்விளக்கு எரிந்து முடிந்த பின்னும், காற்று மண்டலத்தில் சாத்வீகத்தின் தாக்கம் இருப்பதை நான்குமணி நேரம் தாண்டியும் உணரமுடியும்.

2.1 குண்டலினி யோகத்தின்படி வழிபடு பவரின்மேல் ஏற்படும் விளைவு : இருவித விளக்குகளினால் வழிபடுபவரின் மேல் ஏற்படும் விளைவுகளை நாம் இப்பொழுது பார்ப்போம். 1. எண்ணெய் விளக்கினால் வழிபடுபவரைச் சுற்றி தரம் குறைந்த சூட்சும கவசம் உருவாகிறது. நெய் விளக்கினால் அவரைச் சுற்றி உயர்தரமான சூட்சும கவசம் உருவாகிறது. 2. எண்ணெய் விளக்கிலிருந்து வெளிப்படும் சூட்சும அதிர்வுகள் வழிபடுபவரின் மனசக்தியை செயல்பட வைக்கிறது. நெய் விளக் கிலிருந்து வெளிப்படும் சூட்சம அதிர்வுகள் அவரின் ஆன்மசக்தியை செயல்பட வைக்கிறது. குண்டலினி யோக பாதையின்படி, மனிதரிடத்தில் ஏழு சக்கரங்கள் அல்லது ஏழு சக்திமையங்கள் உள்ளன. இந்த சக்கரங்கள், மனிதனின் உடல், மனம், அறிவு உட்பட, அவனின் அனைத்து அம்சங்களிலும் தாக்கங்களை

## எண்ணெய் தீபத்தை ஏற்றுவதால் ஏற்படும் சூட்சும நன்மை

(சூட்சும நிகழ்வைத் தெரிந்து கொள்ள 1, 1அ, 1ஆ, 2, 2அ, 2ஆ, 2இ, 2ஈ, 2உ, 3)




## மெழுகுவர்த்தியின் சூட்சும பரிணாமம்

(சூட்சும நிகழ்வைத் தெரிந்து கொள்ள 1, 1அ, 1ஆ, 1இ, 1ஈ, 1உ, 2, 2அ)




சூட்சும ஞான சித்திரக்காரர் : குமாரி ப்ரியங்கா லோட்லிகர், ஸனாதன் ஸன்ஸ்தா

ஏற்படுத்துகிறது. எண்ணெய் விளக்கானது மூலாதாரம் மற்றும் சுவாதிஷ்டானம் ஆகிய சக்கரங்களை ஓரளவுக்கு தூய்மைப்படுத்தும் வல்லமை கொண்டது. ஆனால் நெய் விளக்கானது மணிபூரக மற்றும் அனாஹத சக்கரங்களை பெருமளவு தூய்மைப்படுத்துகிறது. மனித உடலில் ஏழு சக்கரங்கள் இருப்பதைப்போலவே,உடலில் உயிர்ப்பு சக்தி பாய்வதற்காக பாதைகளும் உள்ளன. இவைகள் நாடிகள் அல்லது பாதைகள் என்று அழைக்கப்படும். சந்திர நாடி,

சூரிய நாடி, சுழுமுனை நாடி ஆகியமூன்று நாடிகள் முக்கியமானவைகளாகும். சந்திரநாடி செயல்படும்பொழுது ஒருவர் தன் உடலில் குளுமையை உணர்வார். சூரியநாடி செயல்படும்பொழுது சக்தி ஊட்டம் பெறுவார். ஒருவர் ஆன்மீகத்தில் முன் னேற ஆரம்பிக்கும்பொழுது, சுழுமுனை நாடி செயல்படும். எண்ணெய் விளக்கு ஒருவரின் சூரியநாடியை செயல்படவைக்கும். நெய்விளக்கு, குறிப்பிட்ட காரியத்திற்கு தேவையான நாடியை வழிபடுபவரிடம் செயல்பட வைக்கும்.

2.2. வழிபடு பவரின் சூட்சும உறைகளில் ஏற்படும் விளைவு: ஆன்மீக அறிவியலின்படி,கண்ணுக்குப் புலப்படும் இந்த ஸ்தூல உடல் ‘அன்னமய கோசம் அல்லது உணவு உறை’ என்று அழைக்கப்பெறும். இது தவிர இன்னும் பிராணமய கோசம் அல்லது உயிர்க்காற்று உறை, மனோமய கோசம் அல்லது மன உறை, விஞ்ஞானமய கோசம் அல்லது அறிவு உறை, ஆனந்தமய கோசம் அல்லது பரவச உறை என நான்கு உறைகள் உள்ளன. பிராணமய கோசம் என்பது ஐந்து முக்கிய உயிர்காற்றுகளின் (ஐந்து பிராணன்கள்) இருப்பிடம். அக்காற்றுகள் ஸ்தூல உடலுக்குச் சக்தியை அளிக்கின்றன. மனோமய கோசம் என்பது உணர்ச்சிப்பெருக்குகளின் இருப்பிடம். விஞ்ஞானமய கோசம் என்பது அறிவின் இருப்பிடம். ஆனந்தமய கோசம் என்பது இருத்தல், மெய்யுணர்வு, பரவசம் (சத், சித், ஆனந்தம்) ஆகியவற்றாலான ஆன்மாவின் இருப்பிடம். இந்த சூட்சும உறைகள் கூட (கோசங்கள்) எண்ணெய் மற்றும் நெய் விளக்கினால் பாதிப்பு அடைகின்றன. எண்ணெய் விளக்கானது பிராணமய கோசத்தில் உள்ள ரஜோ கூறுகளுக்குச் சக்தி கொடுத்து, ஒருவருக்கு அமைதியற்ற தன்மையைத் தந்துவிடும். நெய் விளக்கானது, பிராண மயம் மற்றும் அன்னமய கோசத்தில் உள்ள சாத்வீகக் கூறுகளுக்கு வலிமை கொடுக்கும். அதனால் உயிரானது (ஜீவன், அதாவது உடலில் உறைந்துள்ள ஆன்மா) அமைதியாகவும், நிலையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். 2.3. ஏன் பசுமாட்டின் நெய்யை மட்டும் பயன்படுத்த வேண்டும்? பொதுவாக எல்லா எண்ணெய் விளக்குகளுமே ரஜோ அதிர்வுகளை வெளியிடுகின்றன. ஆனால் நல்லெண்ணெய் கொஞ்சம் சாத்வீக அதிர்வுகளையும் வெளியிடும். மற்ற எண்ணெய் விளக்குகளோடு ஒப்பிடும்பொழுது, நல்லெண்ணெய் விளக்கு சிறிது அதிகமான சாத்வீக அதிர்வுகளை வெளியிடுகின்றது. இருப்பினும் நெய் விளக்குதான் மற்ற எல்லா விளக்குகளையும் காட்டிலும் அதிகப்படியான சாத்வீக அதிர்வலைகளை வெளியிடுகிறது. இங்கே நாம் ஒன்றை கவனத்தில் கொள்வது நன்மை தரும். தெய்வத்தின் முன்னே எரியும் விளக்கில் பசுவின் நெய்யை மட்டுமே ஊற்றி ஏற்றவேண்டும். இது எதனால் என்றால், பசுவின் நெய்யில் ஏற்கனவே தெய்வத் தத்துவங்கள் அடங்கியுள்ளன. சாத்வீகக் கூறுகள் அதிகமுள்ள இந்த நெய், காற்று மண்டலத்தில் சுடர்விடும் உருவங்களை வெளியிடுகிறது. இந்த சுடர்விடும் உருவங்கள் நெருப்புத் தத்துவத்தின் வடிவங்கள் ஆகும். அதிக அளவு சாத்வீக அதிர்வுகளை வெளியிடுவதால், நெய் விளக்கினை நாம் பரிந்துரை செய்தபோதிலும், பொருளாதார வசதியின்மை போன்ற காரணங்களினால் நெய்யை பயன்படுத்த முடியாமல் போனால், நாம் நல்லெண்ணெய்யைப் பயன்படுத்தலாம்.



3. ஐந்து திரிகள் மற்றும் ஒரு திரி கொண்ட விளக்கு: விளக்குகளில் ஒரு திரியுள்ள, ஐந்து திரிகள் உள்ள (நிரஞ்சன்) விளக்கு என பலவகைகள் உள்ளன. ஐந்து திரிகள் கொண்ட நிரஞ்சன் விளக்கு, தெய்வ சக்தி வெளிப்பாட்டின் இரட்டைத் தன்மையின் குறியீடாகும். ஆனால் ஒரு திரி கொண்ட விளக்கு சாத்வீக அதிர்வலைகளை ஈர்க்கக் கூடியது. ஐந்து திரிகள் உள்ள விளக்கு, ரஜோ கூறுகள் மிகுந்த, அழிக்கும்தன்மை கொண்ட அலைகளை ஈர்க்கும். ஐந்து திரிகள் கொண்ட நிரஞ்சன் விளக்கு ஐந்து உயிர்காற்றுகளுக்கு (பஞ்ச பிராணன்) ஆன்மச் சுடருடன் (ஆத்ம ஜோதி) உள்ள உறவைக் குறிக்கிறது. நிரஞ்சன் பஞ்ச ஆர்த்தி காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

நிரஞ்சனின் ஒவ்வொரு சுடரும் ஆத்மஜோதியின் குறியீடாகும். பஞ்ச பிராணன்களின் உதவி கொண்டு கடவுளை எழுந்தருளச் செய்வதுதான் பஞ்ச ஆர்த்தியின் பொருள். பஞ்ச ஆர்த்தி செய்யும் பொழுது, உடலில் உள்ள பஞ்ச பிராணன்களின் உதவியோடு என்னில் உள்ள ஆத்மஜோதி தூண்டப்படுகிறது, அத்தகைய சுடரோடு நான் ஆரத்தியைச் செய்கிறேன் என்ற ஆன்மீக உணர்ச்சிப் பெருக்குடன் செய்ய வேண்டும். ஆகவே, ஒவ்வொரு வருடமும் எண்ணெய் விளக்குகளை ஏற்றி கொண்டாடப்படும் கார்த்திகை தீபப் பண்டிகையின்பொழுது, மெழுகுவர்த்தி அல்லது மின்விளக்கு ஏற்றுவதைவிட எண்ணெய் விளக்கு ஏற்றுவதன் முக்கியத்துவத்தை நாம் இப்பொழுது புரிந்து கொள்ள முயல்வோம். மின்விளக்கு எண்ணெய் விளக்குகளின் வரிசை 1.தெய்வங்களின் சைதன்யம் சுற்றுச்சூழலில் தெய்வ மெய்யுணர்வை ஈர்க்கும் திறன் இல்லாததால் எவ்வித பலனுமில்லை சுற்றுச்சூழலில் தெய்வ மெய்யுணர்வை ஈர்க்க முடிவதால், உற்சாக உணர்வு வருகிறது 2. ஈர்க்கும் திறன் கண்களுக்கு மட்டுமே ஈர்ப்பு. மனதிற்கு களிப்போ உற்சாகமோ தருவதில்லை மனதிற்கு அமைதி மற்றும் உற்சாகம் கிடைக்கிறது 3. புறமுக, அகமுக நோக்கு புறமுகநோக்கு கூடுவதால் தன் குறைகளை ஆராயாமல் பிறர் குறைகளைப் பார்ப்பதால் பதற்றம் ஏற்படுகிறது. அகமுகநோக்கு கூடுவதால், தன் குறைகளை ஆராயமுடிகிறது. 4. நாட்டின் இயற்கை வளங்கள் சேமிப்பு சேமிப்பு இல்லை சேமிப்பு உண்டு

தேவையைப் பொருத்து, சமயச் சடங்குகளில் எண்ணெய் அல்லது நெய் விளக்கு ஏற்ற வேண்டும். (மெழுகுவர்த்தி அல்ல)

அ. மெழுகுவர்த்தி : இன்றைய விழாக்களில், குத்துவிளக்கை மற்றொரு எண்ணெய் விளக்கினால் ஏற்றாமல், மெழுகுவர்த்தியினால் ஏற்றுவதைப் பார்க்கிறோம்.

**2016ஆம் வருடம் கார்த்திகை தீபம் 12.12.2016 மாலை 3.34 மணிக்கு துவங்கி 13.12.2016 மத்தியம் 12.30 மணிக்குள் முடிவடைகிறது. இந்த வருட கார்த்திகை தீபம் ஏற்ற இக்கட்டுரை மிகவும் பயனுடையதாக அமையும் என்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.**

பிறந்தநாளில் கேக்கின் மேலுள்ள மெழுகுவர்த்திகளை ஊதி, அணைத்து கொண்டாடுகிறார்கள்.

மெழுகுவர்த்தியில் மெழுகு முழுவதுமாக எரிவதில்லை அதனால் சுற்றுச்சூழலில் தாமச குண அதிர்வலைகள் அதிகமாக செயல்படவைக்கப்படுகின்றன. ஆகவே ஆன்மீக நோக்கில், மெழுகுவர்த்தி தாமசகுணம் மிகுந்ததாகக் கருதப்படுகிறது. இதன் விளைவாக, மெழுகுவர்த்தி ஏற்றினாலோ அல்லது மெழுகுவர்த்தி கொண்டு விளக்கை ஏற்றினாலோ, தாமச குண அதிர்வுகள் சுற்றுச்சூழலில் பரவுகின்றன.

ஆ.எண்ணெய் விளக்கு: எண்ணெயில் ரஜோகுண அதிர்வுகள் மிகுந் துள்ளன. ஒரு காரியம் செய்வதற்கான உத் வேகத்திற்கு ரஜோகுண அதிர்வுகள் உள்ள செயல்கள் மிக அவசியம். எண்ணெய் விளக்கின் சுடரானது, பிரபஞ்சத்தில் இருக்கும் தெய்வச் செயல்களின் அலைகளை விழிப்படைய வைத்து, தீவீரமாக செயல்பட வைக்கிறது. எனவே,விழாவின் குத்துவிளக்கிற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்ற வேண்டும். இ. நெய் விளக்கு: நெய்யில் சாத்வீக குண அதிர்வுகள் மிகுந்துள்ளன.

எனவேதான் சாத்திரங்களில் தெய்வத்திற்கு அல்லது மகான்களுக்கு ஆரத்தி எடுக்க நெய் விளக்கைப்பயன்படுத்தச்சொல்லியிருக்கிறார்கள். மனிதனின் இருப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் ஒவ்வொரு அம்சத்தையும் இந்து தருமம் ஆழமாக ஆராய்ந்துள்ளது.

அதன்படியே, நடத்தை விதிமுறைகட்குக் கீழ்ப்படியுமாறு மனிதர்கள் அறிவுறுத்தப்பட்டனர். ஒருவர் தருமத்திற்குக் கீழ்படிந்து நடந்தால், அவருக்கு சாத்வீகத்தின் (தூய) நற்பலன்கள் கிடைக்கின்றன. அதன்பலனாக, அவருக்கு ரஜோ, தாமச குணத் தாக்கங்கள் குறைகின்றன.

மேலும் தகவல்களுக்கு:

http://www.spiritualresearchfoundation.org

தொடர்பு : 9380949626



# பழனி முருகன்

1. தண்டாயுதபாணி விக்ரகத்திற்கு நான்கு விதமான அபிஷேக பொருட்கள் மட்டும் தான் உபயோகிக்கபடுகிறது.

அவை, நல்லெண்ணெய், பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி என்பவை. பன்னீர் மார்கழி மாதத்தில் மட்டும் உபயோகபடுத்தபடுகிறது. இவையில் சந்தனம், பன்னீர் தவிர மற்றவை எல்லாம் தண்டாயுதபாணியின் சிரசில் வைத்து, உடனே அகற்றபடுகிறது. முடி முதல், அடி வரை அபிஷேகம் என்கிற முழு அபிஷேகம் சந்தனத்துக்கும், பன்னீரும் மட்டும் தான். இதில் சிரசுவிபூதி என்பது சித்தர் உத்தரவால் பக்தர்களுக்கு வழங்க படுகிற ஒரு பிரசாதம். கிடைப்பது மிக புண்ணியம்.

2. ஒரு நாளைக்கு ஆறு முறை தண்டாயுதபாணிக்கு அபிஷேகம் அலங்காரம் செய்யபடுகிறது.

3. இது ஐந்து முதல் ஏழு நிமிடத்துக்குள் முடிந்துவிடும்.

4. அபிஷேகம் முடிந்து அலங்காரம் செய்துவிட்டால், பின்னர் அடுத்த அபிஷேகம் வரை மாலை சாற்றுவதோ, பூக்களால் அர்ச்சனை செய்வதோ கிடையாது.

5. இரவில் முருகனின் மார்பில் மட்டும் வட்ட வடிவில் சந்தன காப்பு சார்த்தபடுகிறது. விக்ரகத்தின் புருவங்களுக்கிடையில் ஒரு பொட்டு அளவுக்கு சந்தானம் வைக்க படும். முன் காலத்தில் சந்தன காப்பை முகத்திலும் சார்த்தி கொண்டிருந்தனர். பின்னர் இந்த முறை மாற்றப்பட்டது.

6. தண்டாயுதபாணி விக்ரகம் மிகுந்த சூடாக இருக்கும். ஆதலால் இரவு முழுவதும், அந்த விக்கிரகத்திலிருந்து நீர் வெளிப்படும். இந்த நீரை அபிஷேக தீர்த்ததுடன் கலந்து, காலை அபிஷேகம் நடக்கும் போது, அங்கு இருக்கும் பக்தர்களுக்கு பிரசாதமாக விநியோகம் செய்கிறார்கள்.

7. தண்டாயுதபாணி சிலையில், நெற்றியில் ருத்ராக்ஷம், கண், மூக்கு, வாய், தோள்கள், கை, விரல்கள் போன்றவை மிக அற்புதமாக உளியால் செதுக்கபட்டது போல் தெளிவாக இருக்கும். இது போகரின் கை வண்ணம்.

8. அந்த சிலையை சுற்றி எப்போதும் ஒரு வித சுகந்த மணம் (இதுவரை ஒரு போதும் வெளியே உணர்ந்திராத) பரவி நிற்கும்.

9. இந்த சிலையை செய்ய போகர் எடுத்துக்கொண்ட நாட்கள் ஒன்பது வருடம்.

10. அம்பாள், முருகர், அகத்தியர் இவர்களுடைய உத்தரவுக்கு பின் தான் போகர் இப்படி ஒரு சக்தி வாய்ந்த சிலையை செய்ய முயற்ச்சியே எடுத்தார்.

11. இதற்காக 4000 மேற்பட்ட மூலிகைகளை பல இடங்களிலும் சென்று தெரிவு செய்து கொண்டு வந்தார்.

12. 81 சித்தர்கள் இந்த நவபாஷாணத்தை போகர் சொற்படி தயார் பண்ணினர்.

13. இது பொது நல எண்ணத்துடன் செய்யப்பட்டதால் காலமும், இயற்கையும் தன் சீற்றத்தை குறைத்துக்கொண்டு சித்தர்களுக்கு உதவி செய்ததாக ஒரு தகவல்.

14. அகத்தியர் உத்தரவால், ஒரு அசுரன், இரு மலைகளை காவடி போல் சுமந்து பொதிகை நோக்கி கொண்டு செல்ல, முருகர் அவனை தடுத்து நிறுத்தி, போரில் தோற்கடித்து, இரண்டு குன்றையும் இப்போது இருக்கும் இடத்தில் வைக்க செய்தார் என்று புராண தகவல்.

15. போகர், இகபரத்தில் இருக்கும் போது தன் மனைவிக்கு கொடுத்த வாக்கை நிறை வேற்ற, முருகனை மேற்கு திசை நோக்கி பிரதிஷ்டை செய்தார். இதனால், மலை நாட்டில் உள்ளவர்களுக்கு பழனி முருகன் குல தெய்வம் ஆனார்.

16. கல்லில் சிலை செய்து பிரதிஷ்டை செய்து கட்டிய எத்தனையோ கோயில்கள் சிதிலமடைந்து போயும், நவபாஷணத்தில் சிலை செய்த இந்த கோயில் மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருப்பதன் காரணம் ... சித்தர் தான் என்று பலரின் எண்ணம்.

17. தண்டாயுதபாணி சிலைக்கு இடது பக்கத்தில் ஒரு சின்ன மரகத லிங்கம் உள்ளது. அவரை தரிசிக்க வலதுபக்கமாக சென்றால், தீபம் காட்டினால் மட்டும் தான் அதை பார்க்க முடியும்.

18. பழனியில் இரண்டு மரகத லிங்கம் உள்ளது. ஒன்று முருகர் சன்னதியில், இன்னொன்று போகர் சமாதியின் மேல். இரண்டுமே போகர் பூஜை செய்ததாக தகவல்.

19. பழனி முருகன் கேரள மாநிலத்தை பார்த்தவாறு இருப்பதால்தான் கேரள மாநிலம் இயற்கைவளத்துடனும் செழிப்பாகவும் இருப்பதாக கேரள மக்கள் கூறுகின்றனர். அதனால் அவர்கள் மாலை அணிந்து இருமுடி கட்டி பழனி முருகனை தரிசிக்கின்றனர்.

20. வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமல்ல என்பதை உணர்த்தவே முருகன் ஆண்டிக் கோலமும் ராஜ அலங்காரமும் ஏற்றுக் கொள்வதாக கூறப்படுகிறது.

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com



# முக்கிய சயனக் கோலம்

பெருமாளின் சயனக் கோலம் என்பது மிகவும் பிரசித்திப் பெற்றது அந்த விதத்தில் 10வித சயனங்கள் மிக முக்கியமானதாகும்.

1. ஜல சயனம், 2. தல சயனம், 3. புஜங்க சயனம் (சேஷசயனம்), 4. உத்தியோக சயனம், 5. வீர சயனம், 6. போக சயனம், 7. தர்ப்ப சயனம், 8. பத்ர சயனம் (பத்ர எனில் ஆலமரத்து இலை), 9. மாணிக்க சயனம், 10. உத்தான சயனம் ஆகும்.

மேலும், வைணவத்தில் கூறப்படும் திருமால் சயனக்கோலங்களில் மக்கள் தம் பூத உடலுடன் சென்று தரிசிக்க முடியாத ஜல சயனம் 107 வது திவ்ய தேசமான ஸ்ரீவைகுண்டம் எனும் திருப்பாற்கடலில் அமைந்துள்ளது.

வைணவத்தில் கூறப்படும் திருமால் சயனக் கோலமான தல சயனம் மாமல்லபுரம், கடல மல்லை 63 வது திவ்ய தேசமான மாமல்லபுரம் என்னும் கடல மல்லையில் அமைந்துள்ளது. இங்கு திருமால் வலதுகரத்தை உபதேச முத்திரையுடன் மார்பின் மீது வைத்து, தரையில் ஆதிசேடன் மீது சயனித்து காட்சி தருகிறார்.

திருமால் சயனக்கோலமான புஜங்க சயனம் (சேஷசயனம்) முதலாம் திவ்ய தேசமான ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கம் விண்ணகரத்தில் அமைந்துள்ளது. இங்கு திருமால் புஜங்க சயனத்தில் ஆதிசேடன் மீது சயனித்து காட்சி தருகிறார்.

உத்தியோக சயனம் (உத்தான சயனம்) 12 வது திவ்ய தேசமான திருக்குடந்தை என்னும் கும்பகோணத்தில் அமைந்துள்ளது. இங்கு திருமால் (சாரங்கபாணிப் பெருமாள்) திருமழிசை ஆழ்வாருக்காக, சயனத்தில் இருந்து சற்றே எழுந்து பேசுவது போலான உத்தியோக சயனத்தில் காட்சி தருகிறார். இது வேறு எங்கும் இல்லாத சிறப்பு.

வீர சயனம் 59 வது திவ்ய தேசமான திருஎவ்வுள்ளூர் என்னும் திருவள்ளூரில் அமைந்துள்ளது. திருமால், ‘நான் எங்கு உறங்குவது?’ என்று சாலிஹோத்ர முனிவரை கேட்டபோது, அவர் காட்டிய இடம் திருஎவ்வுள்ளூர். இங்கு திருமால் (வீரராகவப் பெருமாள்) வீர சயனத்தில் காட்சி தருகிறார்.






## மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 7,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

aanmeegamalar@gmail.com

whatsapp: 7299992699



# பெருமாளுக்கு சீராக கொடுக்கப்பட்ட ஊர்

வைஷ்ணவ திவ்ய தேசங்களை தரிசிக்க முதலில் செல்லவேண்டிய கோவில் காட்டுமன்னார்குடி வீரநாராயணப் பெருமாள் கோவில். காரணம் இந்த ஒரு தலத்தை தரிசித்தாலே 108 வைணவ திவ்ய தேசங்களையும் தரிசித்த பலன் உங்களுக்கு கிடைக்கும். இது வைஷ்ணவ திவ்ய தேசம் அல்ல. ஆனால் அதனினும் பெருமை மிக்கது.

நாலாயிரத் திவ்ய பிரபந்தங்கள் கண்டெடுக்கப்பட்ட தலம் இது. எனவே முதலில் இந்த தலத்தை தரிசித்துவிடுவது சாலச் சிறந்தது. ஆழ்வார்கள் மகாவிஷ்ணுவைப் பற்றி மனமுருகி பாடிய பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்யப் பிரபந்தம். சிதம்பரத்துக்கு அருகிலுள்ள காட்டுமன்னார்குடி (காட்டுமன்னார் கோவில்) குப்பங்குழியில் அவதரித்த நாதமுனிகள் இந்த நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்கள் அனைத்தையும் நம்மாழ்வாரின் திருவருளால் மீட்டு மக்களுக்கு வழங்கினார். இவரை முதல்வராகக் கொண்டே வைணவ ஆச்சார்யர்களின் பரம்பரை துவங்குகிறது.

இந்த ஊரின் பெயர் வீரநாரயணபுர சதுர்வேதிமங்கம் என்று கல்வெட்டுகளில் உள்ளது. வீரநாராயணன் என்ற பேர் பெற்ற முதலாம் பராந்தகன், இவ்வூரை அமைத்தார். இவ்வூர் சிதம்பரத்திலிருந்து 26 கி. மீ தூரத்தில் இருக்கிறது. இதன் அருகில் தான் தமிழகத்திலேயே மிகப் பெரிய ஏரியான வீராணம் ஏரி இருக்கிறது.

‘வீரநாராயண ஏரி’ என்பதே நாளடைவில் ‘வீராணம் ஏரி’ என்று மருவிட்டது. பெருமாளுக்கும் பிராட்டியாருக்கும் திருமணம் நடைபெற்ற போது இது பெருமாளுக்கு சீராக கொடுக்கப்பட்டதாம்.

# சாப்பிடும் போது பேசாமல் சாப்பிடும் காரணம்

ஏன் சாப்பிடும் போது பேசக்கூடாது தெரியுமா? தெரிந்துகொள்வோம்

உணவுக் குழாய்க்குள் காற்றோ, சுவாசக் குழாய்க்குள் உணவுப் பொருளோ போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் பேசிக்கொண்டே சாப்பிடக்கூடாது என்கிறார்கள்.

மனித முகத்தில் மண்டை ஓட்டின் அதாவது கபாலத்தின் அடிப்பகுதியில் தொடங்கி குரல் வளையின் கீழ் பகுதி வரை தொண்டை என்கிறது, மருத்துவம். இந்த தொண்டையை மேலும் மூன்று பகுதிகளாக பிரிக்கிறார்கள். அவை: முகத்தோடு இணைந்த தொண்டை, வாயோடு இணைந்த தொண்டை, குரல் வளையோடு இணைந்த தொண்டை.

வாயிலிருந்து உணவுக் குழாயானது தொண்டை வழியாக வயிற்றுக்குப் போகிறது. அதேபோல் மூக்கிலிருந்து சுவாசக்குழாயும் தொண்டை வழியாக உணவுக் குழாயைக் கடந்து நுரையீரலுக்குப் போகிறது. இது கிட்டத்தட்ட ஒரு லெவல் கிராசிங் போன்றது.

சுவாசப் பாதையை சாலை என்று வைத்துக் கொண்டால் உணவுப் பாதைதான் ரெயில்வே பாதை. சாலை எப்போதும் திறந்தே இருக்கும். காற்று வந்து போய்க் கொண்டிருக்கும். உணவுப் பாதையில் உணவு வரும்போது அதாவது நாம் சாப்பிடும்போது சுவாசப்பாதை மூடிக் கொள்ளும். உணவு போனதும் மீண்டும் திறந்து கொள்ளும்.

இதில் எதற்கு கதவு போன்ற அமைப்பு என்றால் உணவுக் குழாய்க்குள் காற்றோ, சுவாசக் குழாய்க்குள் உணவுப் பொருளோ போய்விடக்கூடாது என்பதற்காகத்தான். பேசிக் கொண்டே சாப்பிடக்கூடாது என்கிறார்கள். அப்படி சாப்பிடும்போது சுவாசக் குழாய் திறக்கும்.

சுவாசக் குழாய் திறந்தால்தான் பேசமுடியும். இப்படி திறக்கும் சுவாசக் குழாய்க்குள் உணவுப் பொருள் தவறாக நுழைந்து விடும். இதை வெளியேற்றும் முயற்சியில் சுவாசக் குழாய் உள்ளே நுழைந்த உணவை வெளியே தள்ளும். இதைத்தான் புரை ஏறுதல் என்கிறார்கள். மருத்துவத்துறையில் இதை ‘வாட்ச் டாக் மெக்கானிசம்‘ என்று கூறுகிறார்கள்.

மேற்கண்ட காரணங்களால்தான் சாப்பிடும்போது “பேசாமல் சாப்பிடு” என்று நமது முன்னோர்கள் கூறினர். இதை பின்வரும் சந்ததியினர் கடைபிடிக்கவேண்டும் என்ற காரணத்தால்தான் இதுபோன்ற சிறிய விஷயங்களை இந்து மதத்துடன் தொடர்பு படுத்தி வைத்திருந்தனர் நமது முன்னோர்கள்.


ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# பெருமாளை வசைபாடி அருள்பெற்ற ஆழ்வார்

திருஇந்தளூர் என்ற தலம் மயிலாடுதுறை அருகே உள்ளது. இத்தல பெருமாளை திருமங்கையாழ்வார் தரிசிக்க வந்தபொழுது திருக்கோவில் கதவுகள் மூடிவிட்டன. வருத்தமடைந்த திருமங்கையாழ்வார் "வாழ்ந்துபோம் நீரே" என்று கோபத்துடன் வசைமொழியாக பாடினார். உடனே கதவுகள் திறந்தன. பெருமாளையும் தரிசித்தார். வேண்டப்பட்டவர்கள், நமக்கு தேவையான பொருளை நம்மிடம் தரமறுத்தால் "அதை நீயே வைத்துக்கொள்" என்று நாம் கூறுவது போல் ஆழ்வார் கூறினார். பெருமாளும் மனமிரங்கினார். ஸ்ரீ பரிமளரங்கன் என்ற திருநாமம் கொண்ட இந்த பெருமாள் பக்தர்கள் நினைப்பதற்கு முன்பாகவே அவர்கள் வரத்தை அருள்பவர் ஆவார்.

# உலகின் முதல் கண்தானம் செய்தவர்

சிவனின் கண்ணில் ரத்தம் வடிவதைக் கண்டு பொறுக்காமல் "ஊனுக்கு ஊன் இடல்" என்ற மருத்துவ முறைப்படி தன் கண்ணையே பெயர்த்து எடுத்து சிவனுக்கு பொருத்தி தனது பக்தியையும், அன்பையும் காட்டியவர் திருக்கண்ணப்ப நாயனார். இப்படி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உலகின் முதல் கண் தானம் செய்தவரும் அவரேயாவார்.

# "குறையேதும் உண்டோ" சிவபெருமானிடம் கேட்கும் பெருமாள்

திருநெல்வேலி மாவட்டம், திருக்குறுங்குடி பெருமாள் கோவிலில் சிவபெருமானுககு தனி சன்னதி உள்ளது. திருமங்கையாழவார் "அவரொருவர் பக்கம் நிற்க நின்ற பண்பர்" என்று பாடியுள்ளார். இன்றும் திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள் பூஜை முடித்து பெருமாளை தரிசித்த பிறகு பக்கம் நின்றார்க்கு குறையேதும் உண்டோ? என்று சிவனிடம் கேட்பதும், அதற்கு அர்ச்சகர் குறையேதுமில்லை என்று சிவன் சார்பாக பதில் கூறுவதும் வழக்கமாக உள்ளது.

# 21 வருடங்கள் தொடர்ந்து ராமநாம் கூறும் அதிசயம்

குஜராத் மாநிலத்தில் ஜாம் நகரில் ஸ்ரீபால ஹனுமன் திருக்கோயில் உள்ளது. இங்கு "ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்" என்ற திருநாமத்தை நிறுத்தாமல் 24 மணிநேரும் 2 மணி நேரத்திற்கு ஒரு குழு என்று நியமித்து கடந்த 41 வருடங்களாக தொடர்ந்து ராம நாமம் சொல்லி வருகிறார்கள்.



# சீதாவை காக்க குரல் கொடுத்த "ரஷ்ய மக்கள்"

ரஷ்யாவில் உள்ள மாஸ்கோவில் இருக்கும் பல்ஷோய் நாடக அரங்கில் ராமாயண நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ரஷ்ய மக்களுக்கு நம் மொழி தெரியாது என்பதால் ராமாயணக் கதைச் சுருக்கம் அச்சிட்டுப் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது அவையில் நிறையக் குழந்தைகள் இருந்தார்கள் தன்னைச் சுற்றி லட்சுமணன் போட்டிருந்த கோட்டைத் தாண்டி வெளியே வந்த சீதை இராவணனுக்கு பிச்சையிடும் காட்சி. ஆயிரக்கணக்கான குழந்தைகள் அவையில் எழுந்து நின்று, அது ஒரு நாடகம் என்பதையும் மறந்து "சீதா, கோட்டைத் தாண்டாதே. வந்திருப்பவன் ராஷசன், உன்னைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு போய்விடுவான்" என்று பயந்து கூவினார்கள். சீதை வேடம் போட்ட பெண் மக்களின் இந்த ஆர்வத்தை கண்டு மனம் உறுகிப் போனார்.

தொகுப்பு: ஏ.ஜி.ரவி, திருநெல்வேலி
தொ.பே.எண்.9750719085

விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com


ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 நவம்பர் 2016 35
www.aanmeegamalar.com

# சனிபகவானின் சிறப்புகளும் எளிமையான பரிகாரங்களும்

ஒரு சமயம் தேவேந்திரன், சனி பகவானிடம் சென்று, 'நான் தேவர்களுக்கெல்லாம் தலைவன். என்னை நீ எப்படி பிடிக்கலாம்?' என்று கேட்டான். அதற்கு சனி பகவான், 'நான் நீதிமான். எல்லோரையும் சமமாக பாவித்துத்தான் கிரக பரிபாலனம் செய்து வருகிறேன். என் பார்வையில் இருந்து எவரும் தப்ப முடியாது' என விளக்கம் சொன்னார். 'அப்படியென்றால் நீ என்னை பிடிக்கும் நேரத்தையாவது சொல்லி விடு' என்று தேவேந்திரன் வேண்டினான். சனீஸ்வரர் அந்த கால நேரத்தை தெரிவித்தார். சனீஸ்வரர் தெரிவித்த அந்த நேரம் வந்ததும் தேவேந்திரன் பெருச்சாளி உருக்கொண்டு சாக்கடையில் போய் ஒளிந்துகொண்டான். சனி குறிப்பிட்ட கால நேரம் கடந்த பிறகு வெளியே வந்த தேவேந்திரன், சனீஸ்வரரிடம் சென்று, 'உங்கள் பார்வையில் இருந்து தப்பி விட்டேன் பார்த்தீர்களா' என்று பெருமையடித்துக் கொண்டான். சனீஸ்வரர் சிரித்துக்கொண்டே, 'நீங்கள் சிம்மாசனத்தை விட்டு சாக்கடையில் உழன்றீர்களே.. அதுகூட என் பார்வை, பீடிப்பினால்தான்' என்றார். இதன் மூலம் சனீஸ்வரர் ஓர் சமத்துவ நாயகன் என்பதை அறிய முடிகிறது

சனிபகவான் யாருக்கெல்லாம் இன்பம் தருவார், யாருக்கெல்லாம் கெடுதல் புரிவார்

1. நமச்சிவய எனும் நாமம் உச்சரிப்பவர்களை சனி பாதிப்பதில்லை.

2. பாவவினைகளுக்கு பரிகார மருந்து பிரதோஷ வழிபாடு. அதை தடையின்றி செய்பவர்களை சனி தண்டிப்ப்தில்லை.

## வீட்டிலேயே செய்யக் கூடிய எளிய பரிகாரங்கள்!!!

- ❖ தினமும் காகத்திற்கு எள் கலந்த சாதம் வைக்கவும்.
- ❖ சனிக்கிழமை தோறும் பகவானுக்கு இரும்பு அகல் விளக்கில் நல்லெண்ணையில் தீபம் ஏற்றி வழிபடவும்.
- ❖ கருங்குவளை மலர்களால் சனி பகவானுக்கு அர்ச்சனை செய்து வரலாம்.
- ❖ வன்னி மர இலைகளை மாலைகளாகத் தொடுத்து சிவபெருமானுக்கு சனிக்கிழமை தோறும் சாற்றி வணங்கி வழிபடவும்.
- ❖ சனிக்கிழமை தோறும் நல்லெண்ணை குளியல் செய்தால் கெடுதல் குறையும்.
- ❖ ஸ்ரீஆஞ்சநேயருக்கு வடை மாலை அல்லது வெற்றிலை மாலை சாற்றி வழிபடுதல் வேண்டும். அனுமார் வழிபாடு சனி பகவானின் தீவிரத்தை குறைக்கும்.
- ❖ தேய்பிறை அஷ்டமி நாளில் கால பைரவரை வணங்கி வரலாம்.
- ❖ ஞாயிற்றுக்கிழமை மாலை ராகு கால வேளையில் கால பைரவரை வணங்கி வரலாம்.
- ❖ அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்களுக்கு உதவிகளைச் செய்யலாம்.
- ❖ கோமாதா பூஜை செய்யலாம்.
- ❖ சனி பிரதோஷ வழிபாடு சிறந்தது.
- ❖ சித்தர்களின் பீடங்கள், ஜீவ சமாதி பீடங்களுக்கு சென்று வணங்கி வழிபடலாம்.
- ❖ உடல் ஊனமுற்றவர்களுக்கு, விதவை களுக்கு உதவி செய்யுங்கள்.
- ❖ வன்னிமரத்தை சுற்றி வந்து வணங்க வேண்டும். இதனால் சனிபகவானின் கொடுமையான பாதிப்புகள் விலகி விடும்.
- ❖ சனிக்கிழமை விரதமிருந்து பெருமாளை வழிபட்டு காக்கைக்கு உணவு படைத்தல் வேண்டும்.

3. காகத்திற்கு அன்னம் அளிப்பவர்கள், பித்ரு கடன் சரிவர செய்பவர்களை சனி கருணையுடன் பார்ப்பார்.

4. கருப்பு காராம்பசுவின் பால், நெய், தயிர் இவற்றுடன் பூஜிப்பவர்களை சனி மிகவும் விரும்புவார். அவர்களை சோதித்தாலும் பாதிப்பதில்லை.

5. ஆச்சார சீலர்கள், அனுதினம் சிவபூஜை செய்பவர்களை சனி நேசிப்பார்.

6. ஸ்திரவாரம் எனும் சனிக்கிழமை விரதமிருப்பதும், சுதர்சன எந்திர வழிபாடு செய்வதும் சனிக்கு பிடித்தமான ஒன்று.

7. எள்ளன்னம் வைத்து என்னாளும் துதிப்பவரை சனி நெருங்குவதே இல்லை.

8. வலம்புரி சங்குள்ள இல்லம், சாலகிராமத்தை பூஜிப்பவர்களை சனி படுத்துவதில்லை.

9. ருத்ராட்சம் அணிந்தவர்களை ருத்திர பிரியரான சனி பீடிப்பதில்லை.

10. உலர்த்தாத துணியை உடுத்துபவர்களை கண்டால் சனிக்கு கொள்ளை பிரியம். உடனே பற்றிக் கொள்வார்.



11. ஈரம் சொட்ட சொட்ட வீட்டினுள் செல்பவர்களை பார்த்தால் சனிக்கு அவர்கள் மீது பாசம் அதிகம், உடனே அவர்களை பீடித்துக் கொள்வார்.

12. முதல்நாள் உடுத்திய துணியை மறுநாளும் பயன்படுத்துபவர்களை பாத்தால் சனி மிகவும் பிடிக்கும். எப்படியும் சனி பிடித்துக் கொள்வார்.

13. குளிக்காமல் அசுத்தமாக இருப்பவர்களை கண்டாலும், தலைசீவாமல் தலைவிரி கோலமாக இருப்பவர்களை கண்டாலும் சனிக்கு பிடிக்கும்.

14. விளக்கேற்றப்படாமல் இருள் சூழ்ந்த இடங்கள், எப்போதும் அமங்கல சொற்களை பேசுபவர்களை கண்டால் சனிக்கு மிகவும் பிடித்தமானவர்கள். தன் தீயபார்வையால் எப்படியும் திரும்பி பார்ப்பார்.

15. சுத்தம் இல்லாத இடத்தில் சூன்யம் குடியிருக்குமே தவிர, திருமகள் இருக்க மாட்டாள். ஆனால் சனிக்கு அவ்விடங்கள்தான் அதிகம் பிடிக்கும்.

16. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை கொண்டு மற்றவரை வஞ்சித்து வாழ்பவரின் வாரிசுகளைகூட வாழவிடாமல் தண்டிக்க சனிக்கு பிடிக்கும்.

17. மாற்றான் மனையாளை பொண்டாள நினைக்கும் சண்டாளர்களை முதலில் ஊக்குவித்து, பின் அவமானப்படுத்திப் பார்ப்பதில் சனிக்கு நிகர் சனியே.

18. அன்றாடம் சுத்தம் செய்யாத வீட்டிலும், அனுதினம் அழுகுரல் கேட்கும் இல்லத்திலும் சனி நீங்காமல் நிரந்தரமாக இருப்பார்.

19. தாய்க்கு அடங்காத பெண்டீர், தகப்பனுக்கு அடங்காத தனயன், உடன்பிறந்தோரை வஞ்சிக்கும் துரோகி, இவர்களை சனி காலநேரம் பார்த்து தண்டிப்பார்.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699


ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 நவம்பர் 2016 37
www.aanmeegamalar.com

# எதை தேடுகிறாயோ அதை அடைவாய்

- ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனை விட்டு முற்றிலும் நீங்குவதில்லை. அதன் அடையாளம் சிறிதளவேனும் எப்போழுதும் தங்கியிருக்கும்.
- ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவத்தைப் பற்றித் தெரிந்தவனுக்குப் புண்ணியமும் தெரியும். குணத்தைப் பற்றி அறிந்தவன் குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.
- நம்பிக்கை கொள். கடவுளை நம்பி இரு. பின்னர் நீயாக எதையுமே செய்ய வேண்டியிருக்காது. அன்னைகாளி உன் பொருட்டுத் தானே அனைத்தையும் செய்வாள்.
- இறைவனை வெளியே தேடுதல் அறியாமை. தமக்குள்சேயே இறைவன் இருப்பதை உணர்வதே அறிவு.
- கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான். செல்வத்தையும், செல்வாக்கையும் தேடுபவன். அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.
- கடவுள் கற்பக மரத்தைப் போன்றவர். நீ அவரிடம் வேண்டுவது உனக்குக் கிடைக்கும் ஒவ்வொருவரும் தான் வேண்டுவதைப் பெறலாம்.



- பாம்பின் பற்களில் விஷமிருந்தாலும் பாம்புக்கு அதனால் சிறிதும் தீங்கில்லை. அது இறப்பதுமில்லை. ஆனால், பாம்பு எதையாவது தீண்டினால் தீண்டப்பட்டதற்கு அந்த விஷம் தீங்கு செய்கிறது. எனவே, கெட்டவர்களுடன் சேராதே.
- அனைத்து உயிர்களிடமும் சமமாய்க் காட்டப்படும் அன்பு, தயை எனப்படும். இறைவன் எங்கும் நிறைந்துள் ளான் என்ற ஞானத்திலிருந்தே இந்தத் தயை உண்டாகிறது.
- மனிதன் ஒரு தலையணை உறைக்கு ஒப்பிடலாம். கருப்பு, சிவப்பு, பச்சை முதலிய பல நிறம் கொண்டவைகளாக இருக்கலாம். அவை எல்லாவற்றுக்குள்ளும் இருப்பதும் ஒரே பஞ்சு தான். அதுபோல், மனிதருள் சிலர் அழகாகவும், நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், இவர்கள் அனை வருக்குள்ளும் இறைவன் மட்டுமே உறைகிறான்.
- ஒருவன் சாப்பிட்ட உணவை அவன் விடும் ஏப்பத்தின் மூலம் தெரிந்து கொள்ள முடியும். அதுபோல், ஒரு ஞானியை நீ அணுகினால் அவர் உடனே கடவுளைப் பற்றிய விஷயங்களைப் பேச ஆரம்பித்து விடுவார். ஆனால், உலகப்பற்றுள்ளவனோ, உலக விவகாரங்களைப் பற்றியே பேசுவான்.

– இராமகிருஷ்ண பரமஹம்சர்